JUNE 52

333

கண்ணன்

குழந்தைகளின் பத்திரிகை

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
AUG 952
MADRAS

பெற்றோர்களே!

கண்ணன் ஆரம்பித்து இரண்டரை ஆண்டுகள் ஆகின்றன. இன்று வரையில் தாங்கள் தங்கள் குழந்தையைப் போலவே கண்ணனிடம் அன்பு பாராட்டி, ஆதரித்து வருவதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

குழந்தைகள் தங்களுக்கென்று வெளியாகும் எதையும் ஆவலுடன் வாங்கிப் படித்து விடுவார்கள். அவற்றில் எவை சிறந்தவை, எவை தீமையற்றவை என்றெல்லாம் பார்க்கமாட்டார்கள். அவர்கள் கைக்கு எது கிடைக்கிறதோ அதை வாங்கிவிடுவார்கள்.

இந்த அபாயம் உள்ள துறையில் கண்ணன் தன் சிறப்பான தொண்டைச் செய்ய வேண்டியிருக்கிறது. குழந்தைகளை விரும்பிப் படிக்கும்படி செய்யவும் அந்த விஷயங்கள் ருசியுடன் பயனுள்ளவையாகவும் இருக்கும்படி பார்த்துக் கொள்வதுமே எங்கள் பொறுப்பு. விஞ்ஞான விந்தைகளை அவர்கள் மனம் அலுக்காமல் தெரிந்து கொள்ளும்படி சித்திர விளக்கத்துடன் வெளியிடுகிறோம். நம் நாட்டிலுள்ள பல முக்கிய ஊர்களைப் பற்றியும், பெரியோர்களைப் பற்றியும் பட்சிஜாதிகளைப் பற்றியும், குழந்தைகளே தெரிந்து கொள்ளும்படியும் எழுதும்படியும் ஊக்குவிக்கிறோம். குழந்தைகளுடைய உலகம் விரிவடைவதற்கான முறையில் கண்ணன் கழகத்தை ஆரம்பித்து நடத்துகிறோம். அவர்களுடைய கற்பனையைத் தூண்டுகின்ற கதைகளும் கர்ணபரம்பரைக் கதைகளும் வெளியிடுகிறோம்.

இளம் மனத்தைக் கெடுக்கக் கூடிய முறையில் விஷயங்களை வெளியிடுவதில்லை. "அமெரிக்காவில் சிறுவர்களுக்கென நடத்தப்படும் பத்திரிகைகளில் பல, சிறுவர்கள் மனத்தைத் தீமையில் செலுத்துவனவாக இருக்கின்றன. வீரம் வீரம் என்று சொல்லிக் கொண்டு குற்றச் செயலையும் திருட்டு எத்துக்களையும் சொல்லிக் கொடுக்கின்றன. வாழ்க்கையில் இல்லாத துப்பாக்கிப் பிரயோகங்களைச் செய்யத் தூண்டுகின்றன" என்று ஹிந்துவில் வெளியான கட்டுரையைச் சமீபத்தில் படித்திருப்பீர்கள். வாழ்க்கையை ஒட்டிய முறையிலும் மனித இயல்புக்கு ஏற்ற வகையிலும் வருங்காலச் சந்ததியார்களை உருவாக்குவதே கண்ணனின் நோக்கம்.

கல்விமான்களும், ஆசிரியர்களும், பெரியோர்களும், குழந்தைகளுக்கு என்று கண்ணனில் எழுதுகிறார்கள். உங்கள் குழந்தைகளும் அவர்கள் பிஞ்சு உள்ளத்தில் எழும் கற்பனைகளை எழுத்தில் எழுதிப் பழகுகிறார்கள். பெற்றோர்களுக்கான பெரும் பொறுப்பைக் கண்ணன் பகிர்ந்து கொள்கிறது. நீங்கள் அவர்கள் சிறந்தவற்றையே படிக்கும்படி ஆரம்பித்து வைத்துவிட்டால் பிறகு தானாகவே அவர்களுக்கு உயர்ந்தது எது, தாழ்ந்தது எது என்று தெரிந்துவிடும். கண்ணன் குழந்தைகளுக்கு நல்ல ருசியும் புகுத்தறியும் திறமையும் வளர்ந்து வரும்படி பார்த்துக் கொள்கிறது. ஆகவே, உங்கள் ஆதரவுக்கும் நம்பிக்கைக்கும் இன்றுபோல் என்றும் கண்ணன் பாத்திரமாக இருக்கும் என்று உறுதி கூறுகிறோம்.

—ஆசிரியர்.

THE REGISTRAR OF BOOKS
AUG 1952
MADRAS

பொருளடக்கம்

மலர்: 3 இதழ்:

ஜூன், '52

குழந்தைகளே !	பக்கம் ..	2
ஜம்பு - 'ஆர்வி'	.. ..	3
குளிகைத் தீவு - சித்திரக் கதை	..	9
பொல்லாத செருப்புகள் - சௌரி	..	13
பறவை ஆட்டம் - 'ரோஜா'	..	17
ஏமாற்றப் பார்க்கிறியே, அண்ணாவே - கணபதி	..	18
எண்ணிலே படங்கள் - 'மூட்டை'	..	20
கிருஷ்ணன் தூது - ராசு	..	21
கண்ணன் கழக அங்கத்தினர்கள்	..	27
கேள்வித் தாள் - கே. எஸ். ராமமூர்த்தி	..	29
பூமியின் வடிவம் - சாந்த மீனா	..	32
திக்குவாய் ரங்கன் - டி. ராஜகோபால்	..	33
எச்சில் மாங்காய் - இந்து	..	37
முயல்களின் தைரியம் - ஈசாப் கதை	..	40
கிட்டுவின் வால் - ப. ரா.	..	41
டெலஸ்கோப் - புரொபஸர் விஞ்ஞானம்	..	45
நீச்சல் பழக்கம் - டிமான்ஸ்டிரேட்டர்	..	49
கேட்டீர்களா !	..	52
கண்ணன் தபால்	..	53

வருஷ சந்தா ரூ. 3/-

கலைமகள், மஞ்சரி, கண்ணன்

குடும்பச் சந்தா ரூ. 12/-

கதைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே.

காப்பக நூலகம்
211783

குழந்தைகளே!

சென்ற இதழில் சென்னைப் பட்டணத்து வெயிலைப் பற்றிச் சொல்லியிருந்தேனே, ஞாபகமிருக்கிறதா? உங்கள் எல்லாருடைய பிரார்த்தனையினால்தானோ என்னவோ, ஏரிகள் எல்லாம் வறண்டுபோகும்படி காய்ந்துபோயிருந்த சமயத்தில் மழை பிய்த்து வாரிவிட்டது. மழை என்றால் சாமானிய மழையா, என்ன? புயலோடு சேர்ந்த மழை. சென்னையில் மட்டும் 18·5 அங்குல மழை பெய்திருக்கிறது. புழலேரி நிரம்பி, குழாயைத் திறந்துவிட்டால் தண்ணீர் சீறிக்கொண்டு வருகிறது. கொடும் பஞ்சத்துக்கு உள்ளான ராயல சீமையிலும் இந்த மழை அமோகமாகப் பெய்திருக்கிறது. இப்போதைக்குத் தண்ணீர்ப் பஞ்சம் என்று பேசவே முடியாது.

அதே சமயத்தில் என்னுடைய மேஜை மேலும் கதை கட்டுரைகளுக்குப் பஞ்சம் ஏற்பட்டுவிடக் கூடாதே என்று நீங்கள் எல்லாரும் பிரயாணக் கட்டுரைகள், கற்பனைக் கதைகள், பாட்டுக்கள் என்று ஏராளமாக எழுதிக் குவித்துவிட்டீர்கள்! நான் ஒன்றையும் விடாமல் படித்துக்கொண்டிருக்கிறேன். அடுத்த இதழ்களில் நீங்கள் எழுதியவைகளில் சிலவற்றைப் பொறுக்கி வெளியிட எண்ணியிருக்கிறேன். ஆகையால் கட்டுரை வருமா வராதா என்று நீங்கள் வீணாக எழுதிக் கேட்கவேண்டியதில்லை. தேர்ந்தெடுத்தால் அடுத்த இதழிலேயே வரும். இல்லாவிட்டால் கடிதமாவது வரும். தபால்தலை வைத்திருப்பவர்களுக்குத் தேர்ந்தெடுக்கப்படாதவைகளைத் திருப்பி அனுப்பிவிடுவோம்.

கண்ணனை மாதம் இருமுறையாக்கியே தீரவேண்டும் என்று பல குழந்தைகள் போராடத் துவங்கியிருக்கிறார்கள். மே இதழில் சில கடிதங்களை வெளியிட்ட பிறகு, பல குழந்தைகள் கண்ணனை மாதம் இருமுறையாகத்தான் கொண்டு வரவேண்டும் என்று எழுதியிருக்கிறார்கள். இப்பொழுதுள்ள கணக்குப்படி இந்தக் கட்சிதான் வலுத்து இருக்கிறது. ஆகையால் பெரும்பாலான குழந்தைகளின் விருப்பத்தைப் பூர்த்தி செய்யாமல் போகக் கூடாது என்று எண்ணிவிட்டேன். மாதம் இருமுறையாக்க வேண்டிய திட்டங்களையெல்லாம் செய்து வருகிறோம். ஜூலை மாதம் முதலே அப்படிச் செய்துவிட்டால் சந்தாதார்களுக்குக் கூடச் சுலபம் என்று சிலர் எழுதியிருக்கிறார்கள். உண்மைதான். ஆனால் சட்டென்று ஒரு காலை முன்னே எடுத்து வைத்துவிட்டுப் பின் வைக்கலாமா? அதற்காக, எல்லாவற்றையும் பற்றித் தீர ஆலோசித்து வருகிறோம். கூடிய சீக்கிரமே உங்கள் மனப்பூர்வமான வேண்டுகோளைப் பூர்த்தி செய்ய முயலுகிறோம். இதுபற்றிய எங்கள் அறிவிப்பை நீங்கள் சீக்கிரம் எதிர்பார்க்கலாம்.

நீங்கள் வெகு காலமாக எதிர்பார்த்த கூட்டம் மதுரையில் நடக்கப் போகிறது. இந்தக் கூட்டம் நடக்கும் தேதி, இடம் இவற்றைப் பற்றியும் அடுத்த இதழில் தெரிவிக்கிறேன்.

ஜய் ஹிந்த்!

—ஆசிரியர்.

ஜம்பு

ஆர்வி

போலீஸ் இன்ஸ்பெக்டர் பிரசாத்துக்குப் பெருத்த ஏமாற்றமாக இருந்தது. அவர் எவ்வளவு ஆவலுடன் அந்தத் தோல் பையைத் திறந்து பார்த்தாரோ அவ்வளவுக்கு அவ்வளவு அதனுள் ஒன்றும் இல்லாததைக் கண்டு மனம் இடிந்துபோனார். அந்த ஸர்க்கஸ்காரன் கையைப் பிடித்துக்கொண்டு, "இருக்கட்டும். உன் பெயர் என்ன?" என்று கேட்டார்.

"ஸாண்டோ தங்கையா!" என்றான் மோட்டார் சைக்கிளில் வந்த ஸர்க்கஸ்காரன்.

"ஸாண்டோ . . ஓ . . தங்கையா . . ஆ . ." என்று இன்ஸ்பெக்டர் அவன் பெயரை இழுத்துக் கூறியபடி அவன் முகத்தையும் தோற்றத்தையும் ஆராய்ந்து கொண்டிருந்தார்.

'ஓய், இன்ஸ்பெக்டர் வீரரே! நீங்கள் பெரிய சூராதி சூரராக இருக்கலாம். பெரிய மூளைக்காரராக இருக்கலாம். ஆனால் இந்த ஸாண்டோ தங்கையாவிடம் உம்முடைய பாச்சா ஒன்றும் பலிக்காது. தெரிந்துகொள்ளும்!' என்பதுபோல அவன் அவரை வெகு அலட்சியமாக ஏறிட்டுப் பார்த்தான்.

சிங்காரம் ஸர்க்கஸ் கம்பெனியின் புகழ் நாடு முழுவதும் பரவியிருந்தது. அந்தக் கம்பெனிக்கு எவ்வளவு பிராபல்யம் இருந்ததோ அத்தனை பிராபல்யம் தங்கையாவுக்கும் இருந்தது. அவன் வெறும் ஸாண்டோ மட்டும் அல்ல. பற்பல நுட்பமான வேலைகள் செய்து காட்டுவதிலும் சாகசமான செயல்கள் செய்வதிலும் தீரன். இதையெல்லாம் இன்ஸ்பெக்டரே நேரில் பார்த்திருக்கிறார். இந்த அசகாய சூரனால் செய்ய முடியாததே ஒன்றும் இராது என்றுதான் மற்றவர்களைப்போல அவரும் எண்ணினார். ஒரே மூச்சில் ஒரு வாளி தண்ணீர் குடிப்பவனாயிற்றே. அந்தத் தோல் பைக்குள் இருந்தவற்றை அவன் அப்படியே விழுங்கியிருந்தாலும் விழுங்கியிருப்பான் என்று அவர் சந்தேகப்பட்டார். அதனால் ஆளை வெளியே விடாமல் அவனை எக்ஸ்-ரே எடுத்துப் பார்க்கவேண்டும் என்று தீர்மானித்துக்கொண்டார். எக்ஸ்-ரே படம் எடுத்தால் வயிற்றுக்குள் இருப்பதைக் கண்டுபிடித்து விடலாம் அல்லவா?

இதற்குள் ஸர்க்கஸ் மானேஜர் வந்தார். இன்ஸ்பெக்டரையும் ஸாண்டோ தங்கையாவையும் மாறி மாறிப் பார்த்து, "கியா மகராஜ்! கியா பாய்!" என்று பேசத் தொடங்கினார்.

"போ ஐயா, அந்தப் பக்கம். இங்கே பாயுமில்லே; தலைகாணியுமில்லே! மகராஜுமில்லே; மந்திரிகுமாரனுமில்லே!" என்றான் ஸி. ஐ. டி. ஆறுமுகம்.

"ஹலோ, ஸாண்டோ தங்கையா! உள்ளதைச் சொல்லிவிடு. இதனுள் இருந்த சாமான்கள் எங்கே?"

"அதான் கையைவிட்டுத் துழாவிப் பார்த்தீங்களே!"

"அப்போ உண்மையைச் சொல்ல மாட்டாய், இல்லே?"

"உண்மையைத்தான் ஸார் சொல்கிறேன். நீங்கதான் நம்பாமல் மேலே மேலே கேட்கிறீங்க!"

"மரியாதையாகச் சொல்லிவிடு. எப்படியும் நீ என்னிடமிருந்து தப்பிக்க முடியாது. ஒன்றுமே தெரியாதவன் போல வேஷமா போடுகிறாய்? ஐந்து நிமிஷம் அவகாசம் கொடுக்கிறேன். இல்லையோ, கையில் காப்பு மாட்டிக்கொள்ள வேண்டியதுதான்!" என்றார் இன்ஸ்பெக்டர்.

ஸாண்டோ தங்கையா சிங்கத்தின் கர்ஜனையுடன் போட்டி போடுவதுபோலச் சிரித்தான்.

"தூங்கிட்டு எழுந்து விழுந்து வந்தீங்களோ?" என்றான் கனவிறைப்பாக. இவ்வளவு தூரம் இன்ஸ்பெக்டரை எதிர்த்துப் பேசியவரை அவரே இதுவரையில் கண்டதில்லை.

"ஏய், மரியாதையாகப் பேசு!" என்றான் ஆறுமுகம் இடைமறித்து.

"டம, டம, டம், டம் டம் டம டம" என்று அடுத்த நிகழ்ச்சிக்கான வாத்திய முழக்கம் கேட்டது.

"இதோ பாரும், மானேஜர்! உம்மையும் இதோ இந்தத் தங்கையாவையும் அரெஸ்ட் செய்யப் போகிறேன். இன்னும் நாலு நிமிஷம் டைம் இருக்கிறது. அதற்குள் நீங்கள் உண்மையை ஒப்புக்கொள்ளாவிட்டால் கையில் காப்பு ஏறிவிடும்!"

"எதற்காக?" என்றான் தங்கையா.

"அதைச் சொல்ல இது இடம் இல்லை. போலீஸ் ஸ்டேஷனுக்கு வந்தால் தெரியும்!"

"எதற்காக என்பதைச் சொல்லாமல் டைம் மட்டும் கொடுத்தால் நாங்கள் என்ன பதில் சொல்ல முடியும்?"

இன்ஸ்பெக்டர் வேகமாகத் திரும்பி, "நீ லைசென்ஸ் இல்லாத மோட்டார் படகில் சமுத்திரத்தில் சவாரி செய்யவில்லை?" என்று கேட்டார்.

"இல்லை. நான் ஸர்க்கஸ்காரன். ஆயிரக்கணக்கான ஜனங்கள் நான் இங்கே காட்டிய பீட்ஸுகளைப் பார்த்தார்கள். இவ்வளவு பேரும் சாட்சிகள். நான் கடற்கரைக்குப் போகவேயில்லை. நீங்கள் என்னைப் பார்த்திருக்கவும் முடியாது!"

"சரி; மோட்டார் சைக்கிளில் நீ ஸாந்தோம் பீச்சிலிருந்து வந்தது கூடப் பொய்யா?"

"சந்தேகமில்லாமல் பொய்தான்!"

"சரி; உன் பின்வீட்டில் உட்கார்ந்திருந்தானே, அவன் எங்கே?"

"அவன் எங்கேயோ தெரியாது!"

"உனக்குக் கொடுத்த கெடு முடிந்துவிட்டது! சரி; ஆறுமுகம், மாட்டு காப்புகளை இரண்டு பேர் கையிலும்—அடேய், 123, 481 இரண்டு பேரும் ஆறுமுகத்துக்கு ஒத்தாசை செய்யுங்கள்!" என்றார் இன்ஸ்பெக்டர்.

"இன்ஸ்பெக்டர்!" என்று உறுமினான் தங்கையா.

ஆனால் அவர் அதைக் காதிலேயே வாங்கிக் கொள்ளாமல்,

"காப்பை மாட்டுங்கள். நான் இதோ வருகிறேன்!" என்று சொல்லிவிட்டுப் போனார்.

ஸர்க்கஸ் கூடாரத்தைச் சுற்றிச் சுற்றி வந்தும் ஜம்புவை எங்கும் காணவில்லை.

'டம்..டம்' என்று மெல்லிய சப்தத்துடன் டிரம் ஒலித்துக்கொண்டிருந்தது. அதைத் தவிர கூடாரத்தின் மத்திய பாகம் எங்கும் ஒரே நிச்சப்தம். சற்றைக்கு ஒரு தரம் சிங்கமோ புலியோ உறுமிக்கொண்டிருந்தது. கூடாரத்தின் மத்தியிலே மூன்று பெண்கள் கையில் குடைபிடித்துக் கொண்டு தந்திக் கம்பியில் நடந்துகொண்டிருந்தார்கள். கரணம் தப்பினால் குட்டிக்கரணம்தான். வெள்ளையான ரப்பர் காலணியை மாட்டிக்கொண்டு தத்திப் பாய்ந்தார்கள். ஜப்பான் குடையைப் பிரித்துக்கொண்டு ஆகாயத்திலிருந்து வரும் தேவதைகள் மாதிரி பறந்து வந்தார்கள். கீழே தரையில் நாலு பேர்கள் வலையைப் பிரித்தபடி முன் ஜாக்கிரதையாக நின்றுகொண்டிருந்தார்கள். ஜனங்கள் மூச்சுக் காட்டாதபடி அவர்களையே திறந்த வாய் திறந்தபடி பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

ஒரு நிமிஷத்துக்கெல்லாம் ஒரே சக்கரமுள்ள இரண்டு சைக்கிளை உயரே கொடுத்தார்கள். அதற்கு ரப்பர் டயரோ டியூப்போ கிடையாது. அதன் மீது ஏறி அந்தப் பெண்கள் அநாயாசமாகச் சவாரி செய்தார்கள். சைக்கிளைக் கம்பியில் ஒரே இடத்தில் குடையைப்

பிரித்து ஆட்டியபடி நிறுத்திக் காட்டினார்கள்.

இவ்வளவு வேடிக்கைகள் நடந்தும் ஜம்புவை எங்கும் காணவில்லை. இன்ஸ்பெக்டர் அவனை எங்கும் போகவேண்டாம் என்று சொல்லி விட்டுப் போயிருந்தார். ஆனால் ஜம்பு எங்கே போய்விட்டான்?

அவர் அந்தத் தொட்டியைப் பரிசோதிக்க விரும்பினார். அங்கே

ஒரு சமயம் தோல் பையைப் பிரித்து, கப்பலிலிருந்து கொண்டு வந்ததைக் கீழே போட்டிருப்பார்களோ என்று அவருக்குச் சந்தேகம். அந்தச் சமயம் சோதனை செய்யச் சந்தர்ப்பப்படாததால் வெளியே சென்று ஒரு போலீஸ்காரனை அழைத்து வந்து தொட்டியினுள் ஒருவரும் போகாதபடி காவல் இருக்கும்படி கட்டளையிட்டார்.

ஜம்பு ஒரு சமயம் தங்கையாவோடு வந்த இன்னொருவனைத் தேடிக்கொண்டு போயிருப்பானோ என்று அவருக்கு ஓர் எண்ணம் உதித்தது. ஆனால் அடுத்த கணமே அந்த ஆள் குதிரைகள் வரும் இடத்துக்கருகில் நின்றுகொண்டிருப்பதைக் கண்டார். மெதுவாக அவனிடம் சென்று, "தங்கையாவுடைய சாமான்கள் எங்கே?" என்று கேட்டார்.

அவன் தனக்கு எதுவும் தெரியாது என்று கையை விரித்தான்.

அவனுடைய காலரைப் பிடித்துக்கொண்டு, "வாயைத் திறந்து பதில் சொல்லப் போகிறாயா, இல்

லேயா?'' என்று அதட்டினார் இன்ஸ்பெக்டர்.

''பே..பே..பே..'' என்றான் அந்த ஆள்.

அதற்குப் பிறகுதான் அவன் ஊமை என்பது தெரிந்தது.

திடீரென்று ஜனங்கள், ''ஹோ!'' என்று கூச்சலிட்டுக்கொண்டே எழுந்தார்கள். ஒரு பெரிய ஆரவாரம் எழுந்தது. பெண்கள் பயத்தினால் 'வீல்' என்று கிரீச்சிட்டுக் கத்தினார்கள். காலரியிலிருந்து பலர் பாய்ந்து தாவிய அவசரத்தில் இடறி விழுந்தார்கள்.

''சிங்கம்! சிங்கம்!''

சிங்கம் பயங்கரமாய்க் கர்ஜனை செய்துகொண்டு ஒரே தாவாகக் கூண்டிலிருந்து தாவி ஓடி வந்து இரும்புக் கிராதி அடைப்புக்குள் நின்றது. ஆனால் கிராதி அடைப்பு, திறந்தே கிடந்ததைப் பார்த்துத் தான் ஜனங்கள் கூச்சலிட்டார்கள்.

நல்ல காலமாக, சிங்கம் கிராதியை விட்டு வெளிப்பட வில்லை. எந்த க்ஷணமும் சிங்கம் வெளியே பாய்ந்துவிடும். பாய்ந் தால் அவ்வளவுதான்! ஜனங்கள் மீது பாய்ந்து, தன் கூர் நகங் களால் கிழித்து, ரத்த வெள்ள மாய்ப் பெருக்கி........

ஜனங்கள், 'ஹா—ஹோ' என்று கதறியபடி நினைத்த திசையில் ஓடியவண்ணம் இருந்தனர். ஒரு வன் கூடாரத்தின் கம்பியைப் பிடித்து மேலே ஏறுவதற்காகத் தொங்கினான். அவனைப் பார்த்து விட்டு இன்னும் நாலுபேர் அதே போலச் செய்தார்கள்.

கம்பியின் மேலே சைக்கிள் பீட்ஸ் செய்த பெண்கள் பொத்துப் பொத்தென்று வலையில் குதித்தார் கள். உடனே வலையைப் பிடித்துக் கொண்டிருந்தவர்களும் சேர்ந்து கொண்டு உட்புறமாக ஓடினார்கள்.

''ஷட், ஷட்!'' என்று சத்தம் கேட்டது.

''கிராதிக் கதவை மூடு, மூடு!'' என்று கூக்குரல் வந்தது.

''சிங்கம் பாயப் போகிறது. ஜல்தி, ஜல்தி'' என்று ஆரவாரம் எழும்பியது.

எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டே இன்ஸ்பெக்டர் கல் லாய்ச் சமைந்து போய் நின்றார். ஊமையனைப் பிடித்த பிடியை விட்டு விட்டு என்ன நேருமோ என்ற திகிலில் என்ன செய்வது என்று தெரியாமல் ஒரு கணம் அவர் கூறிய மூலையே ஸ்தம்பித்து நின்றது.

''பாவ்...'' என்று கூடாரமே கதிகலங்கும்படி ஒரு கர்ஜனை கேட் டது.

சிங்கம் கிராதியின் வாயிலை நெருங்கி வந்துகொண்டிருந்தது.

இன்ஸ்பெக்டர் திடீரென்று எதையோ பார்த்ததும், வீல் என்று கூவினார். சிங்கக் கூண்டின் அரு கில் ஜம்பு நின்றுகொண்டிருந் தான்!

''ஜம்பூ!'' என்று பெரிதாக ஒரு சத்தம் போட்டார் இன்ஸ்பெக்டர்.

ஜம்பு சிங்கத்தின் பின்புறத்தி லிருந்து முன்னால் பாய்ந்து வந்து கொண்டிருந்தான்.

''டேய், டேய்!'' என்று நாலா பக்கங்களிலிருந்தும் கூக்குரல்கள்.

ஜம்பு கண்ணைத் திருப்பவே யில்லை. சிங்கம் மீண்டும் குலை நடுங்கும்படி கர்ஜனை செய்தது.

அடுத்த கணம் வெளியே பாய்ந் தான். கிராதியைக் கையோடு மூடி விட்டான்.

(தொடரும்)

குளிகைத் தீவு
கதை: ஆர்வி சித்திரம்: சங்கர்...
குந்தலா மோதிரத்தைப் பார்க்கிறாள். சீரகன் மந்திரக் கோலுடன் பின்னால் நிற்கிறான்
மலைக் குகையில் மந்திரவாதி...
குளிகைத் தீவு இளவரசியின் அரண்மனையில் பிம்பருபன்.....
மந்திரத் தீவில்.......
ஆ! என் அத்தான் நாகநந்தனைக் காணுமே! ஒரே இருளாக இருக்கிறதே!
நாகநந்தன் இந்த உலகத்தில் இருந்தால்தானே மோதிரத்தில் தெரிவதற்கு? இந்த மந்திரக் கோல் இருக்கும்வரை உனக்கு என் கவலை? நீ தான் அரசி!
நான் குளிகைத் தீவு இளவரசியின் சகோதரன்! உன்னைக் காப்பாற்றவே வந்தவன். கவலை வேண்டாம்!
எல்லாம் சரி! ஆனால் நீங்கள்?
அப்படியா? சந்தோஷம்! ஆனால் என் மாமா எனக்கு முடி சூட்ட சம்மதிக்க வேண்டுமே!
சம்மதிக்காவிட்டால் சிறைவாசம் தான்!
குந்தலா! அந்த மோதிரம் என்னிடம் இருக்கட்டும்!
பேஷ்! அதுவும் சரியான யோசனை தான். வாருங்கள் அரசரிடம் போவோம்.
மாமா இதோ ஒரு நவரத்தின வியாபாரி! இவரிடம் யாரோ மோதிரத்தை விற்கக் கொண்டு வந்தாராம்!
அப்படியா? நாகநந்தன் என்ன ஆனான்? முதலில் அதைப் பார்!
மோதிரமா?
நான் பார்த்துச் சொல்கிறேன். யாரும் உள்ளே வர வேண்டாம். ராஜகுமாரி! காவற்காரனை எச்சரியுங்கள்
இதோ செல்கிறேன்
அரசே! நான் நாகநந்தன் நண்பன். அவனுக்கு ஒரு வித ஆபத்தும் இல்லை. நான் சொல்வதற்கெல்லாம் பொறுமையாக இருங்கள்
அரசே! இளவரசர் இறந்து விட்டார்!
ஆ! அத்தான்
ஆ!
அரசர் மூர்ச்சையாகி விட்டார் கூப்பிடுங்கள் எல்லோரையும்!

யார் அங்கே? ஊரெங்கும் தண்டோரா போடுங்கள்!
உத்தரவு
இளவரசர் நாகநந் தன் இறந்துவிட்டார் இனி குந்தலா தேவியே பட்டத்து இளவரசியாவர்!
இளவரசர் இறந்தாரா?
இது ஏதோ சூழ்ச்சி!
என்ன?
குந்தலா அரசியா?
இச் செய்தி கேட்டதும் நகரமே துக்கத்தினால் ஓலமிடுகிறது...
முடி சூட்டுவிழாவுக்கான ஆயத்தங்கள் இப்பொழுது முதலே ஆரம்பமாகட்டும்.
அரசரை ஒரு வார்த்தை
அரசர் வாய் திறந்து பேச மறுக்கிறார். அரசியும் மறுக்கிறார்கள்.
கூடாது. அரசர் சம்மதிக்கா விட்டால் இருவரையும் சிறையில் அடையுங்கள்!
அப்படியானால் பொறுத்துச் செய்வோம்!
ஆனால் மோதிரத்தில் இறந்து போனது போல தெரிந்த நாக நந்தன் பாதாள அரக்கனைக் கொன்று விட்டு, குகை வழியாக மந்திரத் தீவின் மாளிகைக்குள் நுழைகிறான்
உன் வெற்றிகளெல்லாம் அந்தக் குளிகை தான் காரணம் ஆயினும் என் உதவி தேவையானால் வருகிறேன் இந்த வழியே செல்!
நாகநந்தன் பல மாடமாளிகைகளைக் கடந்து மணிமண்டப வாயிலை நெருங்கும் போது....
தாதிகள் சென்ற பின்னர்......
ஆகா! என்ன பிரகாசம்! என்ன அழகு!

இடது கண் துடித்தால் நல்லது என்பார்கள்
மந்தா! என் இடது கண் துடிக்கிறது!
தேவி நம் பாதாள அரக்கனை யாரோ கொன்று விட்டார்கள்!
ஆ! கொன்றவன் யார்? காவல் படையினர் என்ன செய்கிறார்கள்?
முதல் ஜாமப் படையினர் தேடிக் கொண்டிருக்கிறார்கள்!
ஆச்சரியமாய் இருக்கிறதே! நம் தீவுக்குள் நுழைந்து பாதாள அரக்கனைக் கொன்றவன் மகா பராக்ரமசாலியாகத்தான் இருக்கவேண்டும். எங்கே இருந்தாலும் அவனைப் பிடித்து வாருங்கள்!
உத்தரவு!
கிளியே! என் கண் துடிப்ப தற்கும் இதற்கும் ஏதாவது சம்பந்த முண்டா?
நான் பால் கொண்டு வருகிறேன்!
உன் மந்திரத் தீவுக்குள் நுழைந்தவன் நான்தான். பாதாள அரக்கனைக் கொன்றது இந்த வாள்!
நீ மகா கொடியவள் என்று கேள்விப் பட்டிருக்கிறேன். என்னை ஏமாற்ற முடியாது!
ஓ! நீங்கள் தானா?
குளிகைத் தீவின் இளவரசிக்காக மந்திரச்சேலை கொண்டு போக வந்திருக்கிறேன்
நீங்கள் வந்த காரணம்?
மந்தா! மந்தா!!
தேவி!
இந்த வீரரை நன்கு உபசரித்து அழைத்து வாருங்கள்!
மந்திரச்சேலை தான் வேண்டும். உன் தந்திர வலையில் நான் அகப்பட மாட்டேன்!
உம் போ! ஒரு சேலை எடுத்து வா! ஆனால் அதை நீங்கள் உடுத்திக் கொண்டு தான் போக வேண்டும்!
நிபந்தனை விசித்திரமாய் இருக்கிறதே!
இவ்வளவு சுலபத்தில் நீ கொடுத்து விடுவாய் என்று நான் எண்ணவில்லை. நீ மிகவும் நல்லவள். ஆஹா! என்ன அழகான சேலை!
உங்களிடம் எதனாலோ எனக்குக் கோபமே வரவில்லை. இந்தச் சேலையை உடுத்திக் கொண்டால் தான் இந்தத் தீவை விட்டு வெளியே போகமுடியும்!
இல்லாவிட்டால்?

தீ பொசுக்கும். காவலாளர்களும் உங்களை விட மாட்டார்கள். ஏன் வீண் தொல்லை? உங்களுக்கு இந்தச் சேலையை உடுத்திக் கொள்ள பயம் ஒன்றும் இல்லையே!
எனக்கா பயம்? இதோ பார்!
ஹஷ்ஹா!
கேலி ஒன்றும் இல்லை. அதோ நிலைக்கண்ணாடியில் உங்கள் உருவத்தைப் பாருங்கள்!
இது என்ன கேலி!
ஆ என் மீசை! இதென்ன, நான் பெண்ணாகி விட்டேனா? ஐயைய!.....
இதென்ன சூழ்ச்சி புடவையை அவிழ்க்கவும் முடியவில்லையே!
வீரப் பெண்ணே! இனி போகலாம்! ரொம்ப சிரமம்!
பெண்ணே! நாங்கள் வருகிறோம். இந்த வேஷத்துடன் வெளியே போக விருப்பமில்லையானால் இங்கே தாதியாகவே இருக்கலாம்!
கடைசியில் பெண்ணாக மாறுவதற்காகவா இவ்வளவு கஷ்டப்பட்டேன்!
பூதமே! இதிலிருந்து மீள வழி இல்லையா?
இந்தத் தீவினுள் என் ஜம்பம் ஒன்றும் சாயாது. உன்னை சுமப்பேனே ஒழிய யோசனை சொல்லத் தெரியவில்லையே?
தங்கக் கிளியே! உன்னை விடுதலை செய்கிறேன். நீயாவது ஒரு வழி சொல்!
முதலில் இந்தக் கூண்டைத் திற!
ராஜ குமாரா! என்னை விடுவித்ததற்கு வந்தனம்!
பெண் உருக்கொண்ட நாகநந்தன் எல்லாம் விபரீதமாக நடப்பதை எண்ணி என்ன செய்வது என்று புரியாமல் சோர்ந்து போய் அப்படியே மஞ்சத்தில் படுத்துக் கண்ணயர்ந்து விடுகிறான்......
டண டண கிச், கிச்!
ஆ! இதென்ன சப்தம்!
ராஜகுமாரா! புறப்படு! உம்..
இந்தக் கோலத்துடனா?
ராஜகுமாரி தூங்குகிறாள்! அவளுடைய மாலையைக் கழற்றிக் கொண்டு வந்து விடு! போ! பயப்படாதே! ஜல்தி!
கிளி அவள் காதருகில் இன்னும் சிலவற்றை ரகசியமாகச் சொல்கிறது
ஆ!
தொடரும்.....

பொல்லாத செருப்புகள்

சௌரி

பல வருஷங்களுக்கு முன்பு பாக்தாத் நகரத்தில் அபூகரீம் என்று பெயருள்ள ஒரு வியாபாரி வசித்து வந்தான். தன் உயிரே போவதாக இருந்தாலும் சரி, தம்படிக் காசு செலவு செய்யமாட்டான். அவ்வளவு கருமி. அபூகரீமைப் பார்த்தால் அவனைப் பணக்காரன் என்று சொல்லத் துணியமாட்டார்கள். கிழிந்து ஒட்டுப் போட்ட பழைய சட்டை; அதே மாதிரி காவியேறி நாற்றமெடுக்கும் வேஷ்டி. யாரும் அவன் பக்கத்தில் உட்காரக்கூட அருவருப்புப் படுவார்கள். அவன் அணிந்திருந்த செருப்புகளை எப்போது வாங்கினான் என்பது யாருக்கும் தெரியாது. சுமார் பதினைந்து வருஷங்களாக அந்தச் செருப்புகளை அவன் கால்களில் பார்த்திருக்கிறார்கள். இத்தனை காலத்திற்குள் எவ்வளவு தையல், ஒட்டுக்களெல்லாம் ஆகியிருக்குமென்று கணக்கிடவே முடியாது. அந்தச் செருப்புகள் சுமார் மூணு, நாலு வீசை கனமாகிவிட்டன. வெளியே கிளம்பினால் எல்லாரும் சிரித்துக் கேலி செய்யத் தொடங்கிவிடுவார்கள். யாராவது மிகவும் கனமுள்ள சாமானைச் சிரமப்பட்டுத் தூக்கும்போது, "இது என்ன ஐயா, அபூகரீம் செருப்பு மாதிரி குண்டாகக் கனக்கிறது!" என்றுதான் சொல்வார்கள். அபூகரீமும் அவனது செருப்புக்களும் அவ்வளவு பிரபலமாகிவிட்டன.

ஜனங்களெல்லாம் அபூகரீம் பணம் சேர்ப்பதற்குப் படும் பாட்டைக் கண்டு ஆச்சரியப்பட்டார்கள். "எதற்காக இவன் இப்படிச் சேர்த்து வைக்கிறான்? வயிற்றுக்கே ஒழுங்காகச் சாப்பிடுவதில்லை. வெளுப்பு வேஷ்டி உடுத்தி இதுவரை பார்த்ததில்லை. நல்ல செருப்பாவது வாங்கியிருக்கிறானா? அதுவும் கிடையாது. பின்னே எதற்காகச் சேர்த்து வைக்கிறான்? குழந்தை குட்டிகளும் இல்லையே!" என்று இப்படியெல்லாம் ஜனங்கள் பேசிக்கொண்டிருந்தார்கள்.

பாக்தாதில் அபூகரீம் பெரும் புள்ளியாகிவிட்டான். அவனைக் கண்டால் மற்றவர்களுக்கு ஆகாது.

பணம் சேர்க்கும் பரபரப்பில் அபூகரீம் குளித்து வெகு நாட்களாகிவிட்டன. ஒரு நாள் போய் ஆனந்தமாக ஸ்நானம் செய்துவிட்டு வரவேண்டுமென்று தோன்றியது. பாக்தாத் நகரத்தில் ஜனங்கள் குளிப்பதற்காக அநேக ஸ்நான அறைகள் கட்டியிருக்கிறார்கள். ஒரு தரம் குளிப்பதற்கு ஓர் அணா கட்டணம். அபூகரீம் துணிந்து ஓரணாவை எடுத்துக்கொண்டு, தன் செருப்புக்களையும் மாட்டிக்கொண்டு புறப்பட்டான். குளிக்கும் இடம் வந்ததும் வாசலில் செருப்புகளைக் கழற்றி வைத்துவிட்டு உள்ளே சென்றான்.

அபூகரீம் குளித்துவிட்டுத் திரும்பி வாசலில் வந்து பார்த்தான். என்ன ஆச்சரியம், அவ

னது செருப்புகளைக் காணவில்லை! அந்த இடத்தில் இரண்டு புதுச் செருப்புகள் வைக்கப்பட்டிருந்தன. அபூகரீமுக்கு ஒரு கணம் திகைப்பாக இருந்தது. 'சரி; ஓசியிலே கிடைச்சதுதானே!' என்று மனத்துக்குள் ஆனந்தப்பட்டுக்கொண்டே. புதுச் செருப்புகளை மாட்டிக் கொண்டு அபூகரீம் வீடு வந்து சேர்ந்தான்.

ஆனால் அங்கே நடந்த விஷயம் வேறு. அன்று குளிக்கும் அறைக்கு வேறொரு தனவந்தர் வந்தார். வெளியில் அபூகரீமின் பயங்கரச் செருப்புகளைப் பார்த்ததும் வெறுப்புடன் அவைகளைத் தூர விட்டெறிந்துவிட்டு அந்த இடத்தில் தன் செருப்புகளை வைத்துவிட்டு உள்ளே குளிக்கப் போனார். திரும்பி வந்து பார்த்தபோது தம் செருப்புகளைக் காணாததும் அவருக்கு அபூகரீமின் மேல் சந்தேகம் ஏற்பட்டது.

சில நாட்களுக்கெல்லாம் அபூகரீம் செருப்புத் திருடிய குற்றத்திற்காகக் கைது செய்யப்பட்டான். தன் மேல் குற்றம் இல்லை என்பதைப் பல வழிகளிலும் எடுத்துச் சொன்னான். நீதிபதி அவைகளைக் காதிலேயே போட்டுக்கொள்ளாமல், "கையும் களவுமாகப் பிடிபட்ட பிறகு இந்தச் சால்ஜாப்புகளை யார் கேட்பார்?" என்று சொல்லி, அபூகரீமுக்கு நூறு ரூபாய் அபராதம் விதித்தார். வயிறு எரிந்துகொண்டே அபராதத்தைச் செலுத்திவிட்டு, புதுச் செருப்பையும் கழற்றிக் கொடுத்துவிட்டு வீடு வந்து சேர்ந்தான். வீட்டிற்குள் நுழையும்போதே அவனது பழைய செருப்புகள் அவனை வரவேற்றன. அவனைக் கேலி செய்யும் நண்பர்களில் யாரோ ஒருவர் அபூகரீமின் செருப்புகள் அநாதையாகத் தெருவில் கிடப்பதைக் கண்டு, அவற்றை அவன் வீட்டு வாசலில் கொணடு வைத்துவிட்டுப் போனார். அவற்றைக் கண்டதும் அபூகரீமுக்கு அசாத்தியக் கோபம் ஏற்பட்டது. 'இந்தச் சனியன் பிடித்த செருப்புகளால்தான் தனக்கு நூறு ரூபாய் தண்டம் ஏற்பட்டது, இவைகளைத் தொலைத்துத் தலை முழுக வேண்டியதுதான்' என்று முடிவு செய்தான். உடனே அவைகளை எடுத்துத் தன் வீட்டுக்குப் பக்கத்திலிருக்கும் நதியில் விட்டெறிந்தான்.

அபூகரீமின் செருப்புகள்தான் நாலு வீசைக் கனமுள்ளவைகளாயிற்றே! நதியில் விழுந்ததும் கற்கள் மாதிரி உள்ளே அமுங்கி விட்டன. அங்கே செம்படவர்கள் மீன்பிடிக்க வலை வீசியிருந்தார்கள். மறுநாள் வலையை வெளியே

இழுக்கும்போது மிகக் கனமாக இருக்கவே ஏதோ பெரிய மீன் கிடைத்திருக்கிறதென்று ஆனந்தத்துடன் வேகமாக வெளியே இழுத்தார்கள். சிரமப்பட்டு இழுத்துக் கரைக்குக் கொண்டுவந்து பார்த்தால் வலையில் ஒரு ஜோடிச் செருப்புகள்! அபூகரீமின் செருப்புகள் இரவு முழுவதும் தண்ணீரில் ஊறிக் கனமாயிருந்தன. "குடியைக் கெடுத்தானே பாவி! அபூகரீம் பண்ணின வேலையைப் பார்த்திங்களா? என்ன அநியாயம்! ஆணிகளிலே மாட்டி வலையெல்லாம் தார் தாராகக் கிழிந்து போயிடுத்தே! அட பாவி!.. இந்தச் செருப்புங்களை அவன் வீட்டிலேயே விட்டெறிஞ்சுட்டு வாங்கடா! இன்னிக்கு யார் மொகத்திலே முளிச்சமோ...." என்று செம்படவர்கள் பையன்களை ஏவினார்கள். பையன்கள் அந்தச் செருப்புகளை ஆளுக்கு ஒன்றாகத் தூக்கிக் கொண்டுபோய், அபூகரீமின் தோட்டத்திலிருந்து வீட்டை நோக்கி வேகமாக வீசி எறிந்தார்கள். அந்தச் செருப்புகள் கண்ணாடி ஜன்னல்களை உடைத்துக்கொண்டு அங்கே அடுக்கி வைத்திருந்த அத்தர் பாட்டில்களையும் தூளாக்கி விட்டன! வீடு திரும்பிய அபூகரீம் இந்த நாச வேலையைக் கண்டதும் வயிற்றிலும் வாயிலும் அடித்துக்கொண்டான். இனி இந்தச் செருப்புகளை வைத்துக்கொள்வது மகா ஆபத்து என்று எண்ணி, இரவில் யாருக்கும் தெரியாமல் தம் வீட்டுக் கொல்லையில் ஆழமாகக் குழி தோண்டினான். இரு செருப்புகளையும் அதிலே போட்டு மூடிவிட்டான்.

இதை அரைகுறையாகப் பார்த்துக்கொண்டிருந்த பக்கத்து வீட்டுக்காரன் மறுநாள் நீதிபதியிடம் போய் அபூகரீம் எங்கேயோ திருடிய பணத்தைப் பூமியில் புதைசது வைத்திருக்கிறான் என்று சொல்லிவிட்டான். உடனே அபூகரீமுக்கு வாரண்டு பறந்தது. கோர்ட்டில் மிரட்டினார்கள். அபூகரீம் எவ்வளவு சொல்லியும் நீதிபதி நம்பவில்லை. அதே குழியைத் தோண்டித் தன் செருப்புகளை எடுத்துக் காண்பித்த பிறகுகூட நீதிபதிக்கு நம்பிக்கை ஏற்படவில்லை. எப்படியோ ஒருவிதமாக வெளியே வந்ததும் கோர்ட்டு சேவகன் அபூகரீமின் செருப்புக்களைத் தயாராக வைத்திருந்து அவனிடம் ஒப்படைத்தான். அவைகளைப் பார்த்ததும் அபூகரீமுக்கு ஆத்திரம் மேலும் பன்மடங்காயிற்று. இந்த நாசகாரிகளான செருப்புகளை ஒழித்துக் சட்டவேண்டும் என்று அவைகளை வீசி எறிந்தான். அந்தப் பொல்லாத செருப்புகள் நீதிபதியின் வீட்டுத் தண்ணீர்த் தொட்டியில் போய் விழுந்துவிட்டன. தண்ணீர் நாற்றமெடுத்ததும் அல்லாமல்



தண்ணீர் வரும் துவாரத்தையும் அடைத்துக்கொண்டு விட்டன. இந்த விஷயம் நீதிபதியின் காதுக் கெட்டியதும் அவருக்குப் பிரமாத கோபம் வந்துவிட்டது.

மறுபடியும் அபூகரீம் கைது செய்யப்பட்டான். முன் தடவையைவிட அதிகமாக அபராதம் விதித்தார். அபூகரீம் அழுதுகொண்டே பணத்தைக் கட்டிவிட்டுத் திரும்பினான். இனிமேல் இந்தச் செருப்புகளைக் கொளுத்திவிட வேண்டியதுதான் என்று தீர்மானித்தான். அவைகளைக் காய வைப்பதற்காகத் தன் வீட்டு மொட்டைமாடியில் கொண்டு போட்டான்.

அன்று மாலை அபூகரீமின் அடுத்த வீட்டு நாய் மொட்டை மாடிப் பக்கம் போனபோது காய்ந்த செருப்புகளைக் கண்டதும், அதற்கு நாக்கில் ஜலம் ஊறியது. அந்தச் செருப்புகளை மாறி மாறிக் கடித்து இழுத்துப் பார்த்தது. ஆணிகளும் இரும்புத் தகடும் கவசம்போல் இருந்ததால் தோலை எளிதில் ருசி பார்க்க முடியவில்லை. கடித்திழுத்த வேகத்தில் ஒரு செருப்பு மாடியிலிருந்து கீழே விழுந்துவிட்டது. கீழே தெருவில் விளையாடிக்கொண்டிருந்த ஒரு சிறுவனின் மேல் விழவே தலை, முதுகெல்லாம் ரத்தக் காயத்துடன் அந்தச் சிறுவன் கீழே விழுந்து மூர்ச்சையாகிவிட்டான். அந்தச் சிறுவனின் பெற்றோர்கள் மறுநாள் கோர்ட்டில் வழக்குக் கொடுத்துவிட்டார்கள்.

இந்தத் தடவை நீதிபதிக்கு அசாத்தியக் கோபம் வந்துவிட்டது. அபூகரீம் வேணுமென்றே தன் செருப்புகளைக் கொண்டு பொது ஜனங்களுக்கு அனர்த்தம் செய்கிறான் என்று முடிவு செய்தார்.

அபூகரீமுக்கு ஒரு வருஷக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. அவன் எவ்வளவு மன்றாடியும் பயனில்லை. கடைசியில் நீதிபதியை வணங்கி, "எனக்கொரு உதவி செய்ய வேண்டுகிறேன்" என்று கெஞ்சினான்.

"என்ன? விஷயத்தைச் சொல்" என்றார் நீதிபதி.

"இந்தப் பாழும் செருப்புகள் என்னை விட்டுத் தொலையாமல் என் குடியைக் கெடுத்துக்கொண்டிருக்கின்றன. சிறைக்குள்ளும் அவற்றை என்னிடம் அனுப்பாமல் இருக்க வேண்டும். இதுவே என் வேண்டுகோள்" என்று மண்டியிட்டு வணங்கி அபூகரீம் கெஞ்சினான்.

"அப்படியே ஆகட்டும்" என்று நீதிபதி அபயமளித்ததும் அபூகரீம் திருப்தியுடன் சிறைக்குச் சென்றான்.



பறவை ஆட்டம்

'ரோஜா'

ஆடும் முறை: பையன்களுக்குப் பறவைகளின் பெயரைக் கொடுக்கவேண்டும். அதாவது, இரண்டு வரிசையிலும் 1, 1 காகம் என்றும் 2, 2 குருவி என்றும் ஒவ்வொரு மாணவனும் வைத்துக் கொள்ளவேண்டும். இரண்டு வரிசைக்கும் சமதூரத்தில் ஒரு ஆகாரப் பொட்டலத்தை வைக்கவேண்டும். தலைவன் 'காகம்' என்று சொன்னவுடன் 'காகம்' (1,1) பெயரைப் பூண்டவர்கள் ஓடி வரவேண்டும். நடுவில் இருக்கும் ஆகாரத்தை எடுத்துச் செல்ல வேண்டும். ஒரு காகம் எடுத்துச் செல்லும்போது மற்றக் காகம் அந்த ஆகாரத்தைப் பிடுங்கிக்கொள்ளலாம். (அதாவது காகம் என்ற பெயருடைய பையனைத் தொடவேண்டும்.) அந்தக் காகம் தன் இடத்தில் போய்ச் சேருவதற்குள் அந்தக் காகத்தை இந்தக் காகம் இறந்ததுபோல் ஆக்கும். ஆட்டத்திலிருந்து அந்தப் பையன் அவுட். இதே மாதிரி தலைவன் வேறு பட்சியின் பெயரைச் சொன்னவுடன் அந்தப் பட்சியின் பெயரையுடைய இரண்டு பையன் கள் முன் போலவே வந்து ஆகாரத்தைத் தம் இடத்திற்கு எடுத்துச் செல்ல முயலவேண்டும். யார் அந்த ஆகாரத்தை மற்றவர் தொடு வதற்குள் எடுத்துச் செல்கிறார்களோ அவர்தான் வெற்றி அடைந்தவர்.

குறிப்பு: தொட்டவுடன் அந்தக் காகம் அவுட்டாகவில்லை என்றால் அந்த அடிபட்ட காகம் மறுபடியும் அந்த ஆகாரத்தை எடுத்துச் செல்ல முயலவேண்டும்.

ஏமாற்றப் பார்க்கிறியே அண்ணவே!

எ. ந. கணபதி

கோடைக்காலம் வந்திருச்சு;

கொதிக்கும்வெயில் அடிக்கலாச்சு.

கோடைக்கானல் போகப்போறேன், தங்கச்சி - அங்கே

குஷியாக இருக்கப் போறேன், தங்கச்சி.

கோடைக்கானல் போறவனே,

குஷியாக இருப்பவனே,

கூடவே நானும் வாரேன், அண்ணவே - நீயும்

கூட்டிட்டுப் போயிடுவாய், அண்ணவே.

தனிக்காட்டு ராஜாவாகத்

தானேநானும் போகப்போறேன்.

உனைக்கூட்டிப் போகமாட்டேன், தங்கச்சி - மாமா

ஊருக்குப் போயிட்டுவா, தங்கச்சி.

மாமாவின் வீட்டிலே போய்

மாடு மேய்க்கச் சொல்லுறியா?

ஏமாற்றப் பார்க்கிறியே, அண்ணுவே - இப்படி
எதுக்காகச் சொல்லுகிறய், அண்ணுவே?
கூதலைத் தாங்கமாட்டாய்;
குளிரைப் பொறுக்கமாட்டாய்.
ஏதுக்கு இந்தத்துன்பம், தங்கச்சி - சுகமாய்
இங்கே இருந்திடுவாய், தங்கச்சி.
அன்புள்ள தங்கச்சி நான்
ஆசையோடு கெஞ்சுறேனே.
வம்புகள் பேசலாமா, அண்ணுவே - என்னை
மறுத்துவிட்டுப் போகலாமா அண்ணுவே?
அம்மாவிடம் சென்றழுது
அடம்பிடித்து நின்றிடுவேன்.
சும்மா இருப்பேனே, அண்ணுவே - நானும்
தெம்மாடி இல்லையடா, அண்ணுவே!
அன்புமகள் நீயழுதால்
அம்மாமனம் பொறுத்திடுமோ?
என்பயணம் நின்றிடுமே, தங்கச்சி - பெருத்த
ஏமாற்றம் ஆயிடுமே, தங்கச்சி!
ஊருக்கு உன்னையுந்தான்
ஒன்றுகக் கூட்டிப் போறேன்,
ஜோராகப் போய் வருவோம், தங்கச்சி - அங்கே
சொகுசாய் வசித்திடுவோம், தங்கச்சி!

எண்ணிலே படங்கள்

(1 முதல் 9 வரையில்) 'மூட்டை'



கிருஷ்ணன் தூது

ராசு

1

[ஆற்றங்கரை. கோடைக்கால மானதால் தண்ணீர் வற்றிவிட்டது. குழந்தைகள் மணலிலே விளையாடிக்கொண்டிருக்கின்றனர். பெரியவர்கள் அங்கங்கே கும்பலாக உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தனர்.

ஓரிடத்திலே ஐந்து பேர்கள் விளையாடிக்கொண்டிருந்தனர். அவர்களிலே இருவருக்குள் சண்டை ஏற்பட்டுவிட்டது.]

மஞ்சுளா: (பக்கத்திலிருந்த பையனிடம்) குமார், என்னைப் பற்றி லக்ஷ்மியிடம் என்ன சொன்னாய்? நான் திருடின்னு சொன்னாயாமே?

குமார்: எனக்கேன் வம்பு? உன்னைப்பற்றி நான் என் சொல்லப் போகிறேன்?

மஞ்: பொய்யைப் பாரு. பேபியுடைய பேனாவை நான் எடுத்து வச்சிருக்கேனாமே. அப்படின்னு சொல்லியிருக்கையே!

குமா: லக்ஷ்மியையே வேண்டுமானால் கேட்டுப் பாரேன். நான் உன்னைப்பற்றிப் பேசினதே இல்லே.

மஞ்: அவள் தான், 'பேபியோட பேனா உன்கிட்டே இருக்குன்னு குமார் சொன்னானே' என்று கேட்டாள். அப்படின்னா லக்ஷ்மி பொய்யா சொல்வாள்?

குமா: அவள் பொய் சொல்வாளோ, நிஜம் சொல்வாளோ. எனக்கென்ன தெரியும்?

மஞ்: பின்னே எதுக்காக என்னைக் கேட்டாள்?

குமா: அவளையே கேளு! நேத்திக்கு பேபியோட பேனா கெட்டுப் போச்சோன்னா, அப்போ உன் கையிலே ஒரு பேனா வைத்திருப்பதைப் பார்த்தேன்.

மஞ்: பார்த்தாயா? உன் வாயாலேயே நிஜம் வந்துடுத்து. நீதான் லக்ஷ்மியிடம் சொல்லியிருக்கிறாய்.

குமா: மஞ்சு. அவசரப்படாதே! என்னிடம் லக்ஷ்மி வந்து, 'பேனா புதுசா, பழசா?' என்று கேட்டாள். நான் 'மஞ்சு வைச்சிண்டிருக்காளே, புதுப் பேனா, அதே மாதிரி' என்றேன். இதைத்தான் அவள் உன்னிடம் புளுகியிருக்கிறாள்.

மஞ்: (கோபத்துடன்) நிறுத்துடா. என்னைப்பற்றி லக்ஷ்மியிடமும் சொல்லிவிட்டுப் பொய் வேறு சொல்றியா! நான் என்ன ஏழையா? எங்கப்பாவுக்கு மாசம் ஐந்நூறு ரூபாய் சம்பளம்.

குமா: ஹூக்கும்!..பிரமாதம். நான் மட்டும் ஏழையா? எங்கப்பா மாசம் ஆயிரம் ரூபாய் சம்பாதிக்கிறார்.

மஞ்: என்னை யாரென்று நினைத்தாய்? என் அப்பா போலீஸ் இன்ஸ்பெக்டர். ஜாக்கிரதை! இனிமேல் என்னைப்பற்றி யாரிடமாவது பொய் சொன்னால் தெரியுமா? நான் திருடியாமே திருடி. நீதான் திருடன்!

குமா: என்ன சொன்னே, நானு திருடன்? இன்னொரு தடவை சொன்னால் தெரியுமா? உங்கப்பா போலீஸாக இருந்தால் என்ன? எங்கப்பா வக்கீலாக்கும்!

(குமார் அவளைப் பார்த்து அழகு காட்டுகிறான்.)

மஞ்: சீ கழுதை! ஏண்டா, அழகு காட்டுகிறாய்? இனிமேல் என்னோடே பேச வேண்டாம். உன்னோடே நான் 'வேஷம்'. என்னோடே பேசினே, உனக்கு வெட்கம், மானம், சூடு, சுரணை கிடையாது.. தூ.. தூ.. தூ!

(மஞ்சுளா மூன்று தடவை காறி உமிழ்ந்தாள்.)

குமா: (சிரித்தபடி) ஆமாம்.. நான்கூடச் சொல்றேன்.. இனிமே நீ என்னோடே பேசினே, உனக்குச் சூடு, சுரணை, வெட்கம், மானம் கிடையாது. தூ.. தூ.. தூ! (குமாரும் காறி உமிழ்ந்தான்.)

மஞ்சு: (பக்கத்தில் நின்று கொண்டிருந்த தோழியைப் பார்த்து) வாடி, இந்திரா. நாம் இரண்டு பேரும் எங்க வீட்டிலே விளையாடலாம்.

குமார்: வாடா, சந்திரா, கிருஷ்ணு, நாம் எல்லாரும் கோயிலுக்குப் போகலாம்.

(எல்லாரும் செல்கின்றனர்.)

2

[நாலைந்து நாட்களுக்குப் பிறகு மஞ்சுளா திண்ணையில் உட்கார்ந்து கொண்டிருக்கிறாள். குமாரின் தோழன் கிருஷ்ணன் வருகிறான்.]

கிரு: மஞ்சு! என்ன பண்ணிக் கொண்டிருக்கே?

மஞ்: பொழுதே போகலையே. கிருஷ்ணு, விளையாட ஒருத்தரும் கிடைக்கலியே!

கிரு: ஏன், நீயும் ஆற்றுக்கு வாயேன், விளையாடலாம்.

மஞ்: ஹூஹூம். வேண்டாம். நான் குமாரோடே பேசமாட்டேன்.

கிரு: பாவம்! ஏன்?

மஞ்: என்னைப் பத்தி லக்ஷ்மியிடம் பொய் சொல்லியிருக்கிறானே!

கிரு: இப்போ வருத்தப்படுகிறான். அவன் செய்தது தப்பு என்று ஒப்புக்கொள்ளுகிறான். இப்போதுகூட என்னை எதற்காக அனுப்பியிருக்கிறான், தெரியுமா?

மஞ்: எனக்கெப்படித் தெரியும்?

கிரு: உன்னைப்போல அவனுக்கும் பொழுது போகலையாம். உன்னோடே விளையாடாமல் இருக்க முடியலையாம்....

மஞ்: (வெறுப்புடன்) ஆமாம்.. லக்ஷ்மியிடம் நான் பேனா திருடினேன் என்று மட்டும் பொய் சொல்லலாமோ?

கிரு: இதோ பார் மஞ்சு, நீ அதையே திருப்பித்திருப்பிச் சொல்றியே! அவன் லக்ஷ்மியிடம், உன் பேனாவைப்போல் புதுசா இருக்குன்னு சொன்னானாம். அதை அவள்

தப்பாகச் சொல்லி யிருக்கிறுள். அவன்தான் தப்புக்கு மன்னிப்புக் கேட்க என்னை அனுப்பியிருக்கிறுன்.

மஞ்சு: என்ன?

கிரு: ஆமாம். அவன் செய்த தப்பை நீ மன்னிச்சுடு. இன்னிலே யிருந்து அவன் உன்னைப்பத்தி யாரிடமும் சொல்ல மாட்டான். இன்னிக்குச் சாயந்தரமாய் வருகிருயா? நாம் வழக்கம்போல விளையாடலாம்.

மஞ்: இனிமேல் என்னைப்பத்தி யாரிடமும் சொல்லமாட்டானே!

கிரு: ஹூஹூம். அதைச் சொல்லத்தான் என்னை அனுப்பி யிருக்கிருன்.

மஞ்: சரி, நான் சாயந்தரம் வருகிறேன்.

கிரு: சபாஷ்!..வருகிறேன்.

[கிருஷ்ணன் சந்தோஷத்தோடு ஓடுகிருன்.]

3

[குமார் மாட்டுக் கொட்டிலில் கன்றுக்குட்டியோடு விளையாடிக் கொண்டிருக்கிருன். கிருஷ்ணன் வருகிருன்.]

கிரு: குமார், ஓடி வா!

குமா: வா, கிருஷ்ணு. என்ன சங்சதி?

கிரு: உனக்கு ஒரு தபால் கொண்டு வர்திருக்கிறேன்.

குமா: என்னது?

கிரு: மஞ்சுவிடமிருந்து செய்தி கொண்டு வர்திருக்கிறேன்.

குமா: அவள் கிடக்கிறுள்!

கிரு: பாவம்டா, குமார்.

குமா: என்ன பாவம்? என்னேடே பேச மாட்டேன்னு சொல்லிவிட்டுப் போனுளே! இப்போ மட்டும் சொல்லியனுப்ப லாமோ?

கிரு: அதுக்காக வருத்தப் படுகிருளடா!

குமா: வருத்தமாவது, மண்ணுங் கட்டியாவது! அவள் அப்பா போலீஸாயிருந்தால் என்னை என்ன செய்துவிட முடியும்?

கிரு: குமார், நான் சொல்வதைக் கேளேன்.

குமா: பாருடா, கிருஷ்ணு. நான் லக்ஷ்மியுடன் பேசவே இல்லே. நான் அவளைத் திருடின்னு சொன்னேனும்!

கிரு: நீ அதை விட்டுவிடு. லக்ஷ்மி அவளிடம் பொய் சொல்லி யிருக்காள். மஞ்சுவே சொன்னுள். லக்ஷ்மியின் பேச்சைக் கேட்டுக் குமாரைக் கோபிச்சுண்டுட்டேன்னு அழுதாளடா பாவம்.

குமா: நிஜம்மாவா..? எனக்கும் அவளோடே விளையாடாமல் பொழுதே போகமாட்டேங்கறது.

கிரு: இன்னிக்குச் சாயந்தரம் ஆற்றுக்குவரச்சொல்லியிருக்கேன்.

குமா: போடா. அவள் என்ன சொல்லியிருக்கிறாள் தெரியுமா? 'என்னோடே பேசினால் உனக்கு வெட்கம், மானம், சூடு, சுரணை கிடையாது' என்று சொல்லியிருக்கிறாள். என்னால் எப்படி வர முடியும்? எனக்கு வெட்கம், மானம் எல்லாம் இருக்கு.

கிரு: அவள்தானே உன்னை முதலில் விளையாடக் கூப்பிடுகிறாள்? என் மூலமாய்ச் சொல்லியனுப்பியிருக்கிறாள். அப்போது அவளுடைய சபதம் பொய்யின்னு ஆயிடறதில்லையா?

குமா: எனக்கென்ன தெரியும்? நீ சொல்றபடி செய்யறேன்.

கிரு: அப்படியென்றால் சாயந்தரம் நீ ஆற்றுக்கு வந்துவிட வேண்டியதுதான். என்ன சொல்றே?

குமா: சரி.

கிரு: சந்தோஷம்.

(வெளியே ஓடுகிறான்.)

4

[மாலை மணி நாலு இருக்கும். ஆற்றங்கரையில் மஞ்சுளாவுக்காகக் குமார் காத்திருக்கிறான். மஞ்சுளா வருகிறாள்.]

மஞ்சுளா: (குமாரைப் பார்த்துவிட்டு) குமார்....நான் சொன்னதை மறந்துவிடு. இனிமேல் அந்த மாதிரி சொல்ல மாட்டேன்.

குமார்: மஞ்சு! நானும் உன்னைப் பற்றி இனிமேல் யார்கிட்டேயும் சொல்ல மாட்டேன்.

மஞ்: ஆமாம். இந்த நாலு நாளும் உனக்குப் பொழுது எப்படிப் போச்சு?

குமா: அதை ஏன் கேக்கறே? சதா உன் நினைவுதான். என்ன செய்வது?..உனக்கு மட்டும் பொழுது போனது எப்படி?

மஞ்சுளா: எனக்கு மட்டும் என்ன? அதேமாதிரிதான். பொழுதே போகாது. பாண்டி விளையாடுறதுன்னா எவ்வளவு நேரம் விளையாடுவது? எனக்கு அலுத்துப் போச்சு..

குமா: எனக்கும் ஒரேயடியாய்க் கன்றுக்குட்டியிடம் விளையாடி அலுத்துப் போச்சு. இன்னிக்கு மத்தியான்னம் கிருஷ்ணன் வந்து....

மஞ்: கார்த்தாலே என்னிடமும் வந்திருந்தானே.

குமார்: நீ சொல்லி அனுப்பினதைச் சொன்னான்.

மஞ்: நான் ஒரு விஷயமும் சொல்லியனுப்பலியே! என்ன சொன்னான்?

630 006

குமா: வேடிக்கையாய் இருக்கே! அன்றைக்கு என்னைத் திட்டியதற்காக வருத்தப்படுவதாகவும் இனி, திட்டமாட்டேன் என்றும் சொல்லியனுப்பினாயாமே!

மஞ்: இல்லை, குமார். நிஜமாச் சொல்றேன். நான் ஒன்றும் சொல்லி அனுப்பவில்லை.

குமா: கிருஷ்ணன் பொய் சொல்ல மாட்டான்!

மஞ்: உண்மையாய், சத்தியமாய்ச் சொல்கிறேன். நான் ஒன்றும் சொல்லியனுப்பவில்லை.

குமா: போடி. நான் உன்னைச் சொன்னேன் என்று திருப்பிச் சொல்கிறாயா?

மஞ்: இல்லை, குமார். கார்த்தாலே நான் திண்ணையிலே விளையாடிக்கொண்டிருந்தேன். எட்டு மணிக்குக் கிருஷ்ணன் வந்தான். நீதான் அனுப்பினாய் என்று சொன்னான்.

குமார்: மஞ்சு!

மஞ்: நான் சொல்லுவதைக் கேட்டுவிட்டுப் பிறகு பேசு.

குமா: ஹூம்.

மஞ்: கிருஷ்ணனிடம், 'லக்ஷ்மியிடம் சொன்னது தவறுதான். இனிமேல் அப்படிச் சொல்லமாட்டேன். என்னை மன்னித்துவிடு' என்று நீ அழுதாயாம்!

குமா: உன்னை ஏமாற்றி விட்டான், திருட்டுப் பயல்!

மஞ்: அதனால் நானும் வருத்தப்பட்டேன். பொழுது போகவில்லை என்று மட்டும் சொன்னேன்.

குமா: உன்னைப்போல என்னையும் ஏமாற்றி யிருக்கிறான். அவன் வந்து சொன்னபோது நிஜம்னு நம்பிவிட்டேன். தெரியுமா?

மஞ்: நான்கூடத்தான் ஏமாந்து போய்விட்டேன். என்ன நடிப்பு நடித்தான். இங்கே வரட்டும்!

குமா: பொய் சொல்லி, சண்டையை உண்டாக்க விரும்பியிருக்கிறான். இரு, இரு, வரட்டும், உதைத்து நொறுக்கிவிடுகிறேன்.

[கிருஷ்ணன் ஓடி வருகிறான்.]

குமார், மஞ்சுளா: (ஏககாலத்தில்) இங்கே வாடா. என்னடா, ஏமாத்திவிட்டாய்?

கிருஷ்ணன்: (ஒன்றும் தெரியாதவன்போல) எனக்கு ஒன்றும் தெரியாதே!

குமா: முழியைப் பாரு, ஆடு திருடினவன் மாதிரி.

மஞ்: பொய் சொல்றவன், திருட்டுப் பயல்.

கிரு: என்ன லக்ஷார்ச்சனையா?

மஞ்: பின் எதற்காக இல்லாததையும் பொல்லாததையும் சொல்லி யிருக்கிறாய்?

குமா: என்னைப்பற்றி ஏண்டா மஞ்சுவிடம் பொய் சொன்னாய்?

கிரு: யாரிடம் பொய் சொன்னேன்? ஏன் என் மீது அபாண்டமாசப் பழி சுமத்துகிறீர்கள்?

குமா: (ஏளனமாக) ஆஹா! அரிச்சந்திர மஹாராஜாடா இவரு! என்னிடம் வந்து உளறினாயே.

மஞ்சு அந்த மாதிரி சொல்லவில்லை என்று சொல்கிறுளே!

மஞ்: ஆமாம், குமார். நான் அந்த மாதிரிச் சொல்லவேயில்லை. பொய் சொல்லியிருக்கிறுன்.

குமா: அது போகட்டும். உன்னிடம் மஞ்சுவைப்பற்றி நான் என்ன சொன்னேன்? அவளிடம் போய் இல்லாததையும் பொல்லாததையும் ஏன் சொன்னுய்?

மஞ்: குமார், இவன் என்னிடம் என்ன சொன்னுன் தெரியுமா? 'லக்ஷ்மியிடம் சொன்னது தவறுதான். இனிமே சொல்ல மாட்டேன். என்னை மன்னித்துவிடு' என்று நீ சொல்லியனுப்பினுயாம்!

வாத்தியார்: இங்கிருந்து நீ டெல்லிக்குப் போகவேண்டுமானுல் முதலில் என்ன செய்ய வேண்டும்?

பையன்: எங்க அப்பாவிடம் போய் ஓயாமல் அழவேண்டும். இல்லாவிட்டால் அவர் வாயிலிருந்து போ என்ற வார்த்தையே வராது.

—சந்தானம்.

குமா: போதுமா, சாட்சி? உனக்கு எதிரிலேயே நிரூபித்து விட்டேன். இப்போது என்ன சொல்கிறுய்? ஏன் இம்மாதிரி எங்களிடையே சண்டையை ஏற்படுத்தப் பார்க்கிறுய்?

மஞ்: ஆமாம்.

கிரு: ......

குமா: ஏண்டா, விழிக்கிறுய்? சொல்லுடா!

மஞ்: வாயிலே என்ன, கொழுக்கட்டையா அடைச்சிருக்கு?

கிரு: ஹஹ்ஹஹ்ஹா (சிரிக்கிறுன்)....நான் ஆரம்பித்த காரியம் சுபமாய் முடிந்து விட்டது!

மஞ்: என்ன தைரியம், பார்த்தாயா, குமார்?

குமா: என்ன காரியம் சுபமாய் முடிந்துவிட்டது?

கிரு: நீங்கள் இருவரும் சண்டை போட்டுக்கொண்டு ஒருவரோடு ஒருவர் பேசுவதில்லை என்று சபதம் வேறு செய்துவிட்டீர்கள். உங்களை விட்டால் நான் யாரோடு விளையாடுவது? ஆகவே, உங்களிடையே உள்ள சண்டையைப் போக்க ஒரு வழி கண்டுபிடித்தேன். அதன் பேரில் இரண்டு பக்கமும் இரண்டு பொய் சொன்னேன். காரியமும் பலித்தது; உங்கள் சண்டையும் முடிந்துவிட்டது.

குமா: (மஞ்சுவைத் திரும்பிப் பார்த்து) பார்த்தாயா?

கிரு: (சிரித்தபடி) வேடிக்கைதான் போ!

கிரு: அப்பாடா. கிருஷ்ணன் தூது எப்படி?

மஞ்சு, குமார்: (இருவரும்) பலே பேஷ்!

(மூவரும் விளையாடப் போகின்றனர்.)

கண்ணன் கழக அங்கத்தினர்கள்

(S) 595. சுந்தரமூர்த்தி, M. S., திருச்சி. 596. சண்முகம், C. S., கோயம்புத்தூர். 597. சம்பத்குமரான், S. N., சத்தியமங்கலம். 598. சுதர்சன், P., சென்னை-17. 599. சாமிநாதன், V. S., வெள்ளானூர். 600. சிவராஜ பிள்ளை, S., திருவண்ணாமலை. 601. சாம்பசிவன், R., கும்பகோணம். 602. சகுந்தலா, K., முசிரி. 603. சுந்தரராஜன், R., மதுரை. 604. சாரங்கபாணி, D., பாளையங்கோட்டை. 605. சீனிவாசன், K., இளம்பிள்ளை. 606. சிவதாஸ், P. K., கிண்டி. 607. சங்கரன், C., சென்னை-2. 608. சுப்பிரமணியன், ராமன், R. V., புதுடில்லி. 609. சுப்பிரமணியன், M., கிண்டி. 610. செல்வராஜன், G., தாரமங்கலம். 611. சுந்தரம், S., ஆத்தூர். 612. சிவராஜ், B. N., கோயம்புத்தூர். 613. சாந்தா, R., தஞ்சாவூர். 614. சுந்தரராஜு, சரஸ்வதி, G., வடுகாச்சேரி. 615. சரஸ்வதி, நடராஜன், V., சென்னை-14. 616. சுப்பிரமணியன், T., தஞ்ஞோமாலியம், மலாயா. 617. சுப்பிரமணியன், S. V., வில்லிவாக்கம். 618. சுந்தரராமன், S., தஞ்சாவூர். 619. சீனிவாசன் N. C., சென்னை-8. 620. சரோஜினி, S., சென்னை-17. 621. சீனிவாசன், J. C., சென்னை-18. 622. சரவணபவன், C., முத்தாயிப்பாளையம். 623. சீதா, ராமமூர்த்தி, C. V., ஜாம்ஷெட்பூர். 624. சாமிநாதன், N., கும்பகோணம். 625. சேஷாத்திரி, N., கரூர். 626. சங்கரகிருஷ்ணன், சென்னை-4. 627. சண்முகம், சீனிவாசன், K. N., சென்னை-2. 629. சுகுமார், T. M., கொழும்பு-14. 630. சண்முகம், N. M. N., டிக்கோயா. 631. சோமசுந்தரம், A., மதுரை. 632. ஸ்ரீதரன், ராமதுரை, K., வில்லிவாக்கம். 633. சலாவுதீன், N. M., சங்ககிரிதுர்க்கம். 634. சந்தானம், T., மன்னார்குடி. 635. சீனிவாசன், S., திருப்பத்தூர். 637. சுலோசனா, C. B., குடியாத்தம். 638. சுந்தரம், K., மஞ்சக்

இங்கே கத்தரியுங்கள்.

கண்ணன் கழகப் அங்கத்தினர் பதிவு கூபன்

(கட்டணம் இல்லை)

பெயர் ....

விலாசம் ....

....

பிறந்த தேதி..............................

(தேதி, மாதம், வருஷம்)

ஜூன் '52 கூபன் நெ:

குப்பம். 639. சடகோபன், K. S., பம்பாய்-22.

(T) 60. தியாகராஜன், லக்ஷ்மணன், N., விஸ்வநாதபுரம். 61. தங்கம்மாள், P., மேலச்செட்டிக்குளம். 62. திருவள்ளுவர் சிறுவர் சங்கம், அம்மாப்பேட்டை. 63. தணிகாசலம், A., வையம்பாளையம். 64. தியாகராஜன், A., தூத்துக்குடி. 65. தியாகராஜன், K., (விலாசம் எழுதவில்லை.) 66. திருமலை, P. R., திருநெல்வேலி. 67. தியாகராஜன், M., (விலாசம் எழுதவில்லை.) 68. தியாகராஜன், S., மட்டக்களப்பு. 69. தியாகராஜன், K., புதுக்கோட்டை. 70. தங்கவேல், T., திருச்செங்கோடு. 71. திருமலையப்பன், K.R., தென்காசி. 72. தங்கவேலு, S., பந்தமங்கலம். 73. தியாகராஜன், V., திருநெல்வேலி. 74. திருமலை, கண்ணம்மாள், T., திருநெல்வேலி. 75. திருவேங்கடம், கண்ணன், நரசிம்மன், R., அயனாவரம். 76. தியாகராஜன், P., ஆத்தூர். 77. தங்கராஜன், S., பாலப்பட்டி. 78. திருநாவுக்கரசு, T.N., மாதவபுரம். 79. தங்கவேலன், R., திருச்சி. 80. திருவேங்கடம், S., (விலாசம் எழுதவில்லை.) 81. தங்கவேலு, திருச்செங்கோடு. 82. தியாகராஜன், R., தாராபுரம். 83. தங்கராஜ், C., பள்ளுச்சேரி. 84. தியாகராஜன், R., மதுரை. 85. தங்கவேலு, M. K., (விலாசம் எழுதவில்லை.) 86. திரவியம், V. R., வீரவநல்லூர். 87. தியாகராஜன், G., சென்னை - 5. 88. தியாகராஜன், M. S., வேலூர். 89. தியாகராஜன், S., கும்பகோணம். 90. தென்சில், வின்சே, தூத்துக்குடி. 91. தங்கவேலு, S., அம்பீட்டியா. 92. தங்கராஜு, சுந்தரேசன், வசந்தா, C., முக்குடி. 93. திருமலைசாமி, R., ரசாக்காப்பாளையம். 94. தியாகராஜன், K. T., சிவகாசி. 95. தங்கவேலு, T., திருச்செங்கோடு. 96. தணிகாசலம், S., சென்னை-7. 97. திருமலையப்பன், K. R., தென்காசி. 98. தியாகராஜன், T., தூனரி, நீலகிரி. 99. திருநாவுக்கரசு, T., சென்னை-4. 100. தங்கபாண்டியன், R., கோயம்புத்தூர். 101. தாமஸ் பெர்னாண்டோ, A., கொழும்பு-13.

(U) 21. உமா, சீதாராமன், சுலோசனா, குமார், K., வேலூர். 22. உதயசங்கர், M. S. V., மாகாளிப்பட்டி.

(மீதி அடுத்த இதழில்)

★★★★★★★★★★★★★★★

கண்ணன்

கழகம்

★

புதிதாகச் சேருபவர்கள் 1952-ஆம் வருஷக் கூபன்களைத் தான் அனுப்பவேண்டும். 1951-ஆம வருஷக் கூபன் செல்லாது.

★★★★★★★★★★★★★★★

கேள்வித் தாள்

கே. எஸ். ராமமூர்த்தி

"கோபு, கோபு! ஏண்டா உட்கார்ந்தபடியே தூங்கறியே? பரீட்சைக்குப் படிக்கறது நன்றாய்த்தான் இருக்கு! எழுந்து படிடா!" என்று அதட்டினார் கோபுவின் தகப்பனார்.

கண்ணைக் கசக்கிக்கொண்டே நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டான் கோபு. அதற்குள் சமையற்கட்டில் இருந்த அவன் தாயார் வெளியே வந்தாள். "ராத்திரி எல்லாம் சண் முழிச்சுப் படிச்சிருக்கான் குழந்தை. கண்ணெல்லாம் கோவைப் பழமாச் சிவந்து கிடக்கே! உங்களாட்டமா சினிமா பார்க்கவா போனான் கோபு?" என்று கோபுவுக்காகப் பரிந்து பேசினாள் அவன் தாயார்.

இதைக் கேட்ட அவன் தகப்பனாரும் விட்டுக் கொடுப்பவராக இல்லை. "போதும், உன் பிள்ளை சமர்த்தை நீதான் மெச்சிக்கணும். முதல் நாள் பரீட்சையிலேயே பையன் பலே கெட்டிக்காரன் என்று தெரிஞ்சுவிட்டதே! தமிழ்ப் பரீட்சை! அதுவே சரியாய் எழுதலையே! 30 மார்க்குத்தானே வரும்போல இருக்கு. தமிழே இவனுக்கு ஆலகால விஷமாகப் போயிடுத்தே!" என்று தகப்பனார் குறை கூற ஆரம்பித்துவிட்டார்.

"நமக்கு இருக்கிறதோ ஒண்ணு. அவன் படித்துப் பாஸ் பண்ணி எந்தக் கோட்டையைப் பிடிச்சுத் தரணும்? படிச்சுப் படிச்சுக் குழந்தைக்கு மூளையே குழம்பிக் கிடக்கு. பள்ளிக்கூடத்திலே பரீட்சையே வைக்காமல் இருந்தால் கூடத் தேவலை போலிருக்கே? இங்கிலீஷ் நன்னாப் படிச்சிருக்கான். நூற்றுக்குத் தொண்ணூறு மார்க்கு எடுத்துடுவான் எப்படியும்" என்றாள் தாயார்.

"நான் சொல்லிக் கொடுத்ததை எல்லாம் ஞாபகத்தில் வைத்திருந்து எழுதினால் நூறு மார்க்கே வாங்கலாமே. எல்லாம் பையன் குட்டு சாயங்காலம் பரீட்சை எழுதின பிறகு வெளியாகிறது" என்று பந்தயம் பேசியவாறு அப்பா வேலையைக் கவனிக்கச் சென்றுவிட்டார்.

தாய் தகப்பனாரின் சம்பாஷணைகளைக் கேட்டுக்கொண்டிருந்த கோபு எழுந்து, பள்ளிக்கூடம் கிளம்பத் தன்னைத் தயார் செய்துகொள்வதில் முனைந்தான். சரியாக மணி பத்து அடித்தவுடன்

பரீட்சை ஹாலுக்குள் நுழைந்தான். இடத்தில் உட்கார்ந்த பிறகு கேள்வித்தாள் வரும்வரை அவனுக்கு நெஞ்சு பயத்தால் அடித்துக் கொண்டுதான் இருந்தது. பேப்பர் கையில் வந்தவுடன் கண்ணில் ஒற்றிக் கொண்டான். கடவுளை நினைக்கவோ, வேண்டிக்கொள்ளவோ அதுதானே சமயம்!

ஆச்சரியத்தால் அவன் கண்கள் மலர்ந்தன. எதிர்பார்த்த கேள்விகள் எல்லாம் அப்படியே வந்திருந்தன. ஒன்று, இரண்டு, மூன்று என்று தாள்களை வாங்கி எழுதித் தள்ளிய வண்ணம் இருந்தான். தன்னுடைய இதர வகுப்பு நண்பர்களையும் ஒரு முறை சுற்றிப் பார்த்துக் கொண்டான். எல்லாரும் தன்னைப்போலவே முனைந்து எழுதுவதைக் கண்டு ஆனந்தப் பட்டான். ஏன்? இங்கிலீஷ் பரீட்சையைப் பொறுத்தவரையில் எல்லாரும் பக்கம் பக்கமாக எழுதித் தள்ளுவதற்குக் காரணமாய் இருந்தவன் கோபுதானே! ஒருவாறு பரீட்சையை வெற்றிகரமாக எழுதி முடித்துவிட்டு, போர்க்களத்திலிருந்து வெற்றி மாலை சூடி வரும் வீரனைப் போல் கம்பீரமாக வீட்டிற்குள் பிரவேசித்தான். கோபுவின் தகப்பனார் அவனை ஆவலோடு வரவேற்று, ஒவ்வொரு கேள்வியாகக் கேட்டு, அவைகளுக்கு எல்லாம் கோபு அளித்த விடைகளையும் கேட்டு, ஆனந்தப்பட்டார். "கோபு! நீயா இவ்வளவு நன்றாகப் பரீட்சை எழுதி இருக்கிறாய்?" என்று அவனைத் தட்டி அணைத்துக்கொண்டார். அவன் தாயாருக்கோ, கேட்க வேண்டியதில்லை. இரட்டிப்புச் சந்தோஷம்.

சமயத்தைப் பயன்படுத்திக் கொள்ளக் கோபுவும் தவறவில்லை. ஏககாலத்தில் நான்கு சினிமாக்களுக்கு வேண்டிய பணத்தையும் வாங்கிக்கொண்டான்.

அன்று மாலைப்பொழுது வரையில்தான் கோபுவால் சந்தோஷமாய் இருக்க முடிந்தது. இருட்டிற்று. படுக்கையில் புரண்டு புரண்டு படுத்தான். மஞ்சத்தில் படுத்தாலும் மனசு சரியில்லாத போது தூக்கம் வருமா? மெதுவாகத் தலையைத் தூக்கிப் பார்த்தான். அப்பாவும் அம்மாவும் ஏதோ பேசிக்கொண் டிருப்பதைக் காது கொடுத்துக் கேட்டான்.

"பார்த்தியா நம்ப கோபுவை! ஒரு நாள் இரவு சிரத்தை காட்டிப் படித்ததில் எவ்வளவு திறமையாய்ப் பரீட்சை எழுதியிருக்கான்!" என்றார் அப்பா.

"நான்தான் நம்ப கோபு கெட்டிக்காரன், புத்திசாலின்னு ஆயிரம் தடவை சொல்றேனே!" என்றாள் அம்மா.

தன்னைப்பற்றிப் பெற்றோர் வைத்திருக்கிற மேலான அபிப்பிராயத்தையும் தான் நடந்து

கொண்டிருக்கிற விதத்தையும் கோபு நினைத்துப் பார்த்தான்.

அவனுக்கு மூளை குழம்பியது. உண்மையைச் சொல்வதற்கும் தைரியமில்லை. அன்பான பெற்றோரைப் பொய் பேசி ஏமாற்றி விட்டதோடு பெரிய திருட்டுக் குற்றமும் செய்துவிட்டோமே என்று அவன் வருந்தினான். 'திருடன், திருடன்' என்று அவன் மனம் அடிக்கடி குத்திக் காட்டிக் கொண்டே இருந்தது. படுக்கையில் குப்புற விழுந்து தலையணைக்குள் முகத்தைப் புதைத்துக் கொண்டு அழுதான். விடிந்தது. இளஞ் சூரியனின் பொற்கிரணங்கள் பட்டு மெல்ல எழுந்து உட்கார்ந்தான் கோபு. தள்ளாடியவாறே, அடுப்பண்டை சென்றான். ''அம்மா! அப்பா எங்கே?'' என்று கேட்டான்.

''வாத்தியார் வந்து கூப்பிட்டார். அவருடன் போயிருக்கிறார்!'' என்றாள் தாயார். வாத்தியார் என்றவுடனேயே கோபுவுக்குத் தூக்கி வாரிப் போட்டது. பயத்தால் அவன் அங்கமெல்லாம் நடுங்கின. வெளியே சென்றிருந்த தகப்பனாரின் வரவுக்காகக் காத்திருந்தான். அவரும் வந்தார். கோபுவை விழுங்கிவிடுபவர் போல் முறைத்துப் பார்த்தார். அவர் கண்கள் கோபத்தால் சிவந்திருந்தன.

கோபு ஒன்றும் தோன்றாமல் ஓடிப்போய்த் தகப்பனாரின் கால்களைக் கட்டிக்கொண்டு, 'ஹோ' என்று அழுதுவிட்டான். அழுகையோடு அழுகையாக, ''நான் தெரியாமல் திருடிவிட்டு, பொய் சொல்லிவிட்டேன். இனி அப்படிச் செய்யவே மாட்டேன். மன்னித்து விடுங்கள், அப்பா!'' என்று அலறினான்.

பரபரப்போடு அங்கே பிரவேசித்த கோபுவின் அம்மா, ''என் இப்படிக் குழந்தையைக் கோபித்துக் கொள்கிறீர்கள்?'' என்று கோபுவைத் தூக்கி விடுவிக்க முயன்றாள்.

''அவனை விடு. உள்ளதைச் சொல்லட்டும். எல்லாம் நீ கொடுக்கிற செல்லம்தான்!'' என்று மேலும் இரைந்தார் அவன் அப்பா.

கோபு நடந்ததைச் சொல்லி விட்டான்.

''வாத்தியார் பிள்ளை பாலுதான் இங்கிலீஷ் பேப்பரைத் திருடித் தன் அப்பாவுக்குத் தெரியாமல் கொடுத்தான். நான் பரீட்சை முடிந்ததும் சினிமாவுக்கு அழைத்துப் போகிறதாகச் சொல்லியிருந்தேன். கேள்விகள் எனக்குத் தெரிந்தவுடன் நான் எல்லாப் பையன்களுக்கும் சொல்லிக் கொடுத்தேன்!'' என்று விக்கி விக்கி அழுதுகொண்டே கூறினான் கோபு.

தகப்பனார் அப்படியே ஸ்தம்பித்துவிட்டார். ஏன்? கோபு சொல்லாவிடில் இந்த விஷயம் அவருக்கே தெரிய முடியாதே!

"அப்படியா சங்கதி? கடைத் தெரு வழியாக வருகிறபோது பள்ளிக்கூடத்துக்குள்ளே போய்ப் பார்த்தேன். இங்கிலீஷில் மட்டும் வேறு பரீட்சைக்கு ஆஜராகும்படி ஹெட்மாஸ்டர் சொல்லிக்கொண்டிருந்தார். குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும் என்று சும்மாவா சொன்னார்கள்! எதிர்த்த வீட்டு வாத்தியார் பிள்ளையை நம்ப கோபு அடித்துவிட்டானாம். அவர் கூப்பிட்டு என்னைக் கண்டிக்கச் சொன்னார். நான் கோபுவைக் கண்டிப்பதாகச் சொல்லிக் கோபத்தோடு உள்ளே வந்தேன். பயத்திலே நம்ப பையன் மனசுக்குள்ளே ஒளிச்சு வைச்சிருந்த உண்மையைக் கக்கிவிட்டான்!" என்று அப்பா கோபுவைப் பார்த்தார்.

கோபுவுக்கே சிரிப்புத்தான் வந்தது. தவறாகப் புரிந்துகொண்டு உண்மையை வெளியிட்டுவிட்டோமே என்று அவன் நினைக்கவில்லை. இந்த உண்மையை வெளியிட்டுவிட்டதால் அவன் மனத்தில் உறுத்திக்கொண்டிருந்த பெரும் பாரம் நீங்கிவிட்டது. உண்மை என்றைக்காவது வெளிப்பட்டுவிடும். பொய் நிம்மதியாய், நிர்ப்பயமாய், இருக்கவும் விடாது என்று தெரிந்துகொண்டான்.

தகப்பனார் அவனைக் கோபிக்கவில்லை. அதனால் கோபுவும் இங்கிலீஷ் மறு பரீட்சையை நன்றாகப் படித்து, எழுதிப் பாஸ் செய்துவிட்டான்.

பூமியின் வடிவம்

ஒரு கிராமத்தில் ஒரு பள்ளிக்கூடம் இருந்தது. அதில் இருக்கும் வாத்தியார் மிகவும் சோம்பேறி; மறதியும் உள்ளவர். வாத்தியார் பையன்களுக்குப் பூமி கோழி முட்டை வடிவமுள்ளது என்று சொல்லித் தன்னுடைய பொடி டப்பாவை அடையாளம் காண்பித்தார். அந்த டப்பா உருண்டையானது.

ஒரு நாள் மேல் அதிகாரி அந்தப் பள்ளிக்கூடத்திக்கு வந்தார். அன்று சனிக்கிழமை. அவரும் அதே கேள்வியைக் கேட்டார். எல்லாப் பையன்களும் விழித்தார்கள். பின்னால் நின்றுகொண்டிருந்த வாத்தியார் அவசரமாகத் தம்முடைய பொடி டப்பாவைத் தூக்கிக் காண்பித்தார். அன்றைக்கு அவருடைய டப்பா சதுரமாய் இருந்தது. அவசரமாகப் பள்ளிக்கூடத்துக்கு வந்ததால் மறந்து போய்ச் சதுரமான டப்பாவை எடுத்து வந்துவிட்டார். அதிகாரியின் முன்னால் பையன்கள் விழிப்பதைக் கண்டு கலவரமடைந்து கவனமில்லாமல் அந்தச் சதுர டப்பாவைக் காண்பித்துவிட்டார். உடனே ஒரு பையன் எழுந்தான். "வாரநாட்களில் பூமி கோழி முட்டை வடிவமாகவும் சனிக்கிழமைகளில் சதுரமாகவும் இருக்கும், ஸார்!" என்றான். அதிகாரி ஒன்றும் புரியாமல் வாத்தியாரைப் பார்த்து விழித்தார்.

வாத்தியாரோ முகத்தில் அசடு வழிய நின்றுகொண்டிருந்தார்.

—சாந்தமீனா

திக்குவாய் ரங்கன்

டி. ராஜகோபால்

திக்குவாய் ரங்கனைக் கோடம்பாக்கத்தில் உள்ளவர்களுக்கெல்லாம் நன்றாகத் தெரியும். திக்குவாய் நீங்கி அவன் பெரிய பிரசங்கியானது ஒரு வேடிக்கையான கதை. எந்தத் திறப்பு விழா, மூடு விழாவாயிருந்தாலும் சரி, அதில் ரங்கன் பிரசங்கம் இல்லாமல் இராது. அவனின்றி ஓரணுவும் கோடம்பாக்கத்தில் அசையாது. 'தும்மல் ஜலதோஷத்திற்கு ஆதாரமா அல்லது ஜலதோஷம் தும்மலுக்கு ஆதாரமா' என்ற அரிய பெரிய விஷயத்தைப்பற்றி ஒரு கூட்டத்தில் வெளுத்துக் கட்டிவிட்டான். கூட்டம் கலைந்ததுகூடத் தெரியாமல் பேசிக்கொண்டிருந்தான். அவ்வளவு காரசாரமான பிரசங்கம். அவ்வூரார் அவனுக்குச் 'சண்டப் பிரசண்டன்' என்று பட்டமும் சூட்டினர்.

ஒரு நாள் ரங்கன் தன் திக்குவாயை நினைத்து வருந்தி, சாய்வு நாற்காலியில் உட்கார்ந்துகொண்டிருந்தான். எதிர் வீட்டுக் கல்பகம், 'திக்கத் தெரியாத வீட்டில்—இருந்து நான் வருகிறேனே' என்று பாரதியாரின் பாட்டைத் திரித்துப் பாடிக்கொண்டு உள்ளே நுழைந்தாள். ரங்கன் முகத்தைச் சுளித்தான். கல்பகம் பாட்டை நிறுத்திப் பேச்சை மாற்றினாள். கிண்டலாக, "ஹலோ, மிஸ்டர்! மூன்று எழுத்து வார்த்தை. இனிய குரலுள்ள ஜீவன். விடை என்ன ஸார்?" என்றாள்.

"க..க..க..கழு..தை.."

கல்பகத்திற்குக் கோபம். சரேலென்று வெளியே போய்விட்டாள். கல்பகத்துக்குப் பதினாறு வயது. அத்தையுடன் வசித்து வந்தாள். பரம ஏழையாகையால் அழகுமட்டும் இருந்து என்ன செய்வது? கல்யாணம் ஆகவில்லை. ஸ்கூல் பைனல் தேறியிருந்தாள். நன்றாகப் பாடுவாள். பகுத்தறிவுப் போட்டிப் பைத்தியம் கொஞ்சம் உண்டு. ரங்கனிடம் குழந்தை முதல் பழகியவள். ரங்கனுக்கு வயது சுமார் இருபது இருக்

கும். நல்ல தோற்றம். தாய் தந்தையர்கள் இறந்ததும் குடுமி, கடுக்கன் இவைகளைக் களைந்தான். பணம் நிறைய இருந்தது. திக்குவாய்க் குறையைத் தவிர எல்லாச் சம்பத்தும் நிறைந்திருந்தன. கல்பகத்திடம் அவனுக்கு அதிக ஆசை. ஆனால் அவளோ அவன் திக்கித் திக்கிப் பேசுவதை அடிக்கடி கேலி செய்து வந்தாள். இந்தத் தொந்தரவுக்கு முடிவு தேட மாம்பலத்தில் ஒரு டாக்டரிடம் சென்றான் ரங்கன்.

டாக்டர் முன்னால் போய் நின்றதும், அவனுக்குப் பேச்சே கிளம்பவில்லை. ''ஸ்-ஸ்-ஸ்-ஸ்'' என்று நாகம்போல் சீறினான். டாக்டர் வெகு சிரமப்பட்டுச் சிரிப்பை அடக்கிக்கொண்டு கையமர்த்தினார். ''ஓஹோ! திக்குவாய் உபத்திரவமோ, பாவம்!'' என்றார். ''ஆ-ஆ-ஆ'' என்று ஆரம்பித்து, திக்கித் தடுமாறி, தன் தொல்லையைச் சொல்லித் தொலைத்தான் ரங்கன்.

சாவதானமாகக் கேட்டுவிட்டு டாக்டர், ''சரி மிஸ்டர் ரங்கன், இதற்குப் பீஸ் பத்து ரூபாய். இதை முன்பணமாகக் கொடுக்கவேண்டும். எடும்!'' என்றார். இதை நிச்சயம் சொஸ்தமாக்கிவிடுவாரா டாக்டர் என்று ரங்கனுக்குச் சந்தேகம். ஆனால் பேசித் தீர்ப்பது என்றால் முடிகிற காரியமா? பத்து ரூபாயை எடுத்து நீட்டினான். டாக்டர் அதை வெகு அலட்சியமாக டிராயருக்குள் திணித்துக்கொண்டு, ''மிஸ்டர் ரங்கன்! எங்கே, ஒரு பாட்டுப் பாடுங்க!'' என்றார்.

ரங்கனுக்கு எரிச்சலாக இருந்தது. 'பாட்டாவது, பாடாவதியாவது! பேசவே வரவில்லை. பாடச் சொல்லுகிறாரே இந்த மனுஷன். இவரும் கேலி செய்கிறாரோ?' என்று ஆத்திரம் வந்தது. ஆனால் வாயை விட்டுச் சொல்ல நேரமாகுமே என்று பேசாதிருந்தான். இதைக் குறிப்பாய் உணர்ந்த டாக்டர், ''என்ன மிஸ்டர்! கச்சேரி செய்யச் சொல்லவில்லை. வெட்கம் வேண்டாம். இது ஒருவிதப் பரீட்சை. ஆகையால் கூசாமல் பாடுங்கள்'' என்றார்.

ரங்கன் மறுபடியும் கொஞ்சம் தயங்கினான். ''ச..ச..ச்..சலமேலரா'' என்று ஆரம்பித்தான். என்ன ஆச்சரியம்! கடைசி வரையில் நிற்காமல் பாடி முடித்துவிட்டான். வெளியே ஒரு கழுதையும் 'வாள் வாள்' என்று கத்திக்கொண்டிருந்தது.

''சபாஷ்! பார்த்தீரா! பாடும்போது திக்கவில்லை. இன்னொரு யோசனை சொல்லுகிறேன். வீட்டிலேயே அடைந்து கிடக்கக் கூடாது. தினம் அறிமுகமில்லாத மூவருடனாவது சம்பாஷிக்க வேண்டும். அப்படிச் செய்தால் இந்த உபத்திரவம் தீர்ந்துவிடும்''

என்று டாக்டர், ரங்கனுக்கு 'அவுட் பாஸ்' கொடுத்தார்.

ரங்கனுக்கு உடனே திக்கு வாயைப் போக்கிக்கொள்ள ஆத்திரம்; அவசரமாகத் தெருவில் நடந்தான். ஒருவன் தெருவில் போய்க்கொண்டிருந்தான். ரங்கன் பாம்புபோல் சீறியபடி, "ஸ் - ஸ் - ஸார், உ - உ உங்களைத்-த்-தான்-ஸ் - ஸ் - ஸ் ஸார்!" என்றான். அந்த ஆள் திரும்பவேயில்லை. ரங்கன் ஓடிக்கொண்டே அவனை நெருங்கி, தோளில் தட்டினான். அந்த ஆள் ஆந்தை மாதிரி விழித்துவிட்டுத் தன் வாயைக் காட்டி ஊமை என்பதை ஜாடையாகக் குறிப்பிட்டான்.

"அட, கிரகசாரமே. முதலில் ஊமையும் குருடனுமா கிடைக்க வேண்டும்?" என்று சலித்துக் கொண்டு மேலே நடந்தான். ரங்கன் கொஞ்சதூரம் சென்ற பின் ஆங்கில உடுப்பணிந்த ஒருவன் கைத்தடியை சுழற்றிக் கொண்டு ஒரு மரத்தின் மேல் சாய்ந்து கொண்டிருப்பதைக் கண்டான். அவசரமாக அவனிடம் ஓடி, "நீ-நீ-நீங்கள் இ-இ-இந்த ஊ-ஊர் தானே?" என்றான் ரங்கன்.

"ஹா! என்னைத் தெரியாதவன் கூட இருக்கிறானா? உன்னை விட்டேனா பார்! டாமிட்! நான் தான் மைசூர் மகாராஜா! அதோ பார், என் அரண்மனை!" என்று கார்ப்பரேஷன் கக்கூஸைத் தன் கைத்தடியால் சுட்டிக் காட்டினான் அந்த ஆள். அதோடு விட்டானா! "வா, நம் அரண்மனைக்குப் போகலாம்" என்று ரங்கனைத் தரதரவென்று இழுத்தான்.

"ராம, ராம! இரண்டாவது ஆள் பைத்தியம். தலைவிதி!" என்று தலையில் அடித்துக் கொண்டு அவனைவிட்டுப் போனால் போதும் என்று விடுவித்துக் கொண்டு ஓடினான். பைத்தியமும் பின் தொடர்ந்தது. 'செத்தேன், பிழைத்தேன்' என்று ரெயில்வே ஸ்டேஷனுக்குள் நுழைந்து, நகர்ந்து கொண்டிருக்கும் வண்டியில் தாவி ஏறிக் கொண்டான் ரங்கன். ஆனால் என்ன அசட்டுத்தனம்! அது ஸ்திரீகள் வண்டி. ஒரே ஒரு பெண் பத்திரிகை ஒன்றை வாசித்துக்கொண்டு மூலையில் உட்கார்ந்திருந்தாள். ரங்கனைக் கண்டதும் அவள் பயந்து போனாள்.

"இதில் ஏன் ஏறினீர்கள்?" என்று அவள் 'ஹோ' என்று பயங்கரமாய்க் கூச்சலிட்டபடி சங்கிலியை இழுக்க எழுந்தாள். ரங்கனிடமோ டிக்கட்டும் கிடையாது. கையைக் கூப்பிக்கொண்டு "ம-ம-ம மன்னிக்கவே-வே-வேண்டும். அடுத்த ஸ்-ஸ்-ஸ்-ஸ்டேஷனில் இறங்கி விடுகிறேன்" என்று திக்கித் தடுமாறிக் கெஞ்சினான்.

மெள்ளத் தன் வரலாற்றில் ஒரு பாதியைச் சொல்லி முடித்தான். அந்தப் பெண்ணுக்குச் சிரிப்பு ஒரு புறம்; இரக்கம் ஒரு புறம். கொஞ்சம் சமாதானமாக அடங்கினாள்.

"சரி, நீங்கள் எங்கே போகிறீர்?"

"கோ-கோ-கோ-" என்று வாயைக் கோண இழுத்துக் கொண்டேயிருந்தான்.

"ஓகோ, கோடம்பாக்கமா?"

ரங்கன் தலையைப் பலமாக ஆட்டினான். கழுத்து ஒருபுறம் சுளுக்கிக் கொண்டது. ராஜ பார்வை வேறு பார்க்க வேண்டியதாயிற்று.

"அட பாவமே, இந்த வண்டி தாம்பரத்துக்கு அல்லவா போகிறது?" என்றாள் அவள்.

ரங்கனுக்குப் பைத்தியமே பிடித்துவிடும்போல இருந்தது. இதற்குள் வண்டி சைதாப்பேட்டை வந்து சேர்ந்தது. ரங்கன் ஸ்திரீகள் வண்டியிலிருந்து இறங்குவதை டிக்கட் பரிசோதகர் பார்த்துவிட்டார்.

"எய்!" என்று அவர் கூப்பிட்டதுதான் தாமதம், ரங்கன் சிட்டுக் குருவிபோல் அங்கிருந்து பறந்து ஓடத் தொடங்கினான். ஸ்டேஷனிலுள்ள அனைவரும் துரத்த ஆரம்பித்தார்கள்.

வேலியைத் தாண்டிக் குதித்ததனால் சட்டை வேஷ்டியெல்லாம் கிழிந்து போயின. எப்படியோ ஒருவிதமாய் ஊருக்குள் ஓடிவந்துவிட்டான். பின் தொடர்ந்தவர்கள் நின்றுவிட்டார்கள். பெருமூச்சு விட்டுக்கொண்டு ஒரு ரிக்ஷாவில் வீடுவந்து சேர்ந்தான் ரங்கன். வாசலில் கல்பகம் நின்றுகொண்டிருந்தாள். "மனிதனுக்குத் தொந்தரவு கொடுக்கும் ஜந்து. இரண்டெழுத்து விடை!" என்றாள். 'இதுதானா சமயம், இந்தப் பாழாய்ப் போன போட்டிப் பந்தயத்திற்கு?' என்று எண்ணிய ரங்கனுக்கு ஆத்திரம் பொங்கியது.

"பெண்!" என்று உரக்கக் கத்தினான். ஆனால் வாய் திக்கவில்லை. தட்டுத் தடங்கலின்றிச் சொன்னான். திக்குவாய் நீங்கியது. கோபத்தோடு சந்தர்ப்பம் தெரியாமல் தொந்தரவு செய்த கல்பகத்துக்கு ஒரு நீண்ட லெக்சர் அடிக்க நினைத்தான். அதே நினைவுடன், "சீ! உனக்குச் சமயம் தெரியவில்லையே. மனுஷனுக்குத் தொந்தரவு கொடுக்கும் ஜந்து உன் போன்ற பெண்தான். இரண்டே எழுத்து!" என்று விளாசினான். கொஞ்சமாவது திக்கவேண்டுமே! கல்பகத்துக்கு ஏற்பட்ட ஆச்சரியத்தைப்போல அவனுக்கு ஆயிரம் பங்கு ஆச்சரியம் ஏற்பட்டது.

"நீங்கள் ரங்கன்தானா? அல்லது வேறு யாராவதா?" என்று கேட்க நினைத்தாள் கல்பகம். ஆனால் அவளுக்கே திக்கல் ஏற்படும் போலிருந்தது.

"இன்றையிலிருந்து எட்டாவது நாளுக்குள் நான் பிரசங்கம் செய்ய ஆரம்பிக்கிறேனா, இல்லையா என்று பார்த்துக்கொண்டே இரு!" என்றான் ரங்கன். கல்பகம் கண்கொட்டாமல் அவனையே பார்த்துக்கொண்டிருந்தாள். அவன் திக்குவாய் போன இடமே தெரியவில்லை!

எச்சில் மாங்காய்

இந்து

விச்சுவுக்கு ஆத்திரம் பொத்துக் கொண்டு வந்தது. ரங்கு சொல்வது அக்கிரமம், அயோக்கியத்தனம் என்பது அவனுக்கு நன்ருகத் தெரியும். ரங்கு பெரியவன்; பலசாலி; அதிகம் பேசினுல் பல்லைத் தட்டி, கையில் கொடுத்து விடுவான் என்பதும் அவனுக்குத் தெரியும். ஆனுல் மனசு மாத்திரம் கேட்கவில்லை.

"நான் சொல்வது தவறு என்று தோன்றினுல் யாராவது பொது மனிதர் ஒருவரைக் கேட்டுப் பார்க்கலாம், வா" என்ருன் விச்சு.

"பொது மனிதரிடம் எதற்காகப் போகவேண்டும்? கைப் புண்ணுக்குக் கண்ணுடி எதற்கு? இதில் ஏதாவது சந்தேகம் இருந்தால் தானே பொது மனிதரிடம் போக வேண்டும்? அறிவே இல்லாதவனுக்குக்கூடப் புரியக்கூடிய விஷயமாயிற்றே இது?" என்று சொல்லிக்கொண்டே கையிலிருந்த இரண்டு மாங்காய்களையும் 'லபக்' என்று கடித்துவிட்டான்.

விச்சுவுக்குக் கண்களில் நீர் தத்தளிக்கிறது. மனசு கொதிக்கிறது. கை துடிக்கிறது. ஆனுல் ரங்குவின் வயதையும் பலத்தையும் எண்ணிப் பார்க்கும்போது, 'சரி, கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை' என்று எண்ணிக் கோபத்தைத் தணித்துக் கொள்வதைத் தவிர அப்பொழுது வேறு வழி இருப்பதாக அவனுக்குத் தெரியவில்லை. என்னவோ அந்த மூன்ருவது மாங்காயையும்தான் அவன் கொடுக்க முடியாது என்று சொல்லி யிருந்தால் விச்சு என்ன செய்யப் போகிருன்? வரும் கோபத்தை யெல்லாம் அடக்கிக் கொண்டு, மற்ருெரு பெரு மூச்சு விட்டிருக்கப் போகிருன். பாவம்! அவன் முகத்தைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது!

நடந்த விஷயம் இதுதான். விச்சுவும் ரங்குவும் ஒரு மாந்தோப்புக்குப் போயிருந்தார்கள். மத்தியான்னம் ஒரு மணி இருக்கும். நல்ல வெயில். மனிதர்கள் வெளியிலேயே தலை காட்ட முடியாதபடி கொளுத்தி எடுத்தது. காவற்காரன் குடிசைக்குள் படுத்துக்கொண்டிருந்

தான். வெளியே ஈ, காக்கை இல்லை. இந்த மாதிரி சமயத்தை எதிர்பார்த்துக்கொண்டுதான் அவர்கள் தோப்புக்குச் சென்றார்கள்.

விச்சு மரத்தின்மீது ஏறினான். பெரியதாக மூன்று காய்கள் பறித்துப் போட்டான். இதற்குள் காவற்காரனுடைய குடிசைக்குள் ஏதோ சல சலவென்று சத்தம் கேட்டது. உடனே விச்சுவை இறங்கி வந்துவிடும்படி சொன்னான் ரங்கு. விச்சுவும் இறங்கி வந்துவிட்டான்; இருவரும் சிறிது தூரத்திலிருந்த குளத்தங்கரைச்கு ஓடோடியும் போய்ச்சேர்ந்தார்கள்.

"சற்றுக் கவனிக்காமலிருந்தால் காவற்காரன் கையில் அகப்பட்டுக் கொண்டுதான் இருப்போம்" என்றான் ரங்கு சந்தோஷத்துடன்.

"ஆமாம். நல்ல வேளை. மரத்தின்மீது மாங்காய் இருக்கிற இடத்தையே பார்த்துக் கொண்டிருந்துவிடாமல் அக்கம் பக்கத்திலும் கவனத்தைச் செலுத்தினாயே, அந்த மட்டிலும் நீ கெட்டிக்காரன் தான்" என்றான் விச்சு.

"அதற்காகத்தான் உன்னை மரத்தின்மீது ஏறச் சொன்னேன். என் பார்வை மரத்தின்மீது இருந்ததேயொழியக் காது அக்கம் பக்கத்து நடவடிக்கைகளில்தானே ஈடுபட்டிருந்தது! எப்பொழுது திருட்டு வேலைக்கு வந்தோமோ, இதிலெல்லாம் ஜாக்கிரதையாய் இருக்க வேண்டாமா?" என்றான் ரங்கு.

"சரி, மாங்காயை எடு, சாப்பிடலாம்" என்றான் விச்சு.

"ஆமாம், ஆமாம். யாராவது வருவதற்குள் அதைச் சாப்பிட்டு விடுவோம்" என்று சொல்லிக் கொண்டே மூன்று மாங்காய்களில் இரண்டு காய்களைத் தான் வைத்துக்கொண்டு ஒன்றை விச்சுவின் கையில் கொடுத்தான்.

"என்ன, ஒன்றே ஒன்று கொடுக்கிறாய்?" என்றான் விச்சு.

"பின்னே?"

"மூன்று காய்கள் பறித்துப் போடவில்லையோ?"

"ஆமாம்."

"அதில் பாதி எனக்கில்லையோ?"

"யார் சொன்னது?"

"ஏன், எதற்காக அப்படிக் கேட்கிறாய்?"

"காரணமாகத்தான்."

"என்ன விளையாடுகிறாய்? நாம் இரண்டு பேர் இருக்கிறோம். இருப்பதை இரண்டு பாகமாகப் பிரித்து, ஆளுக்கு ஒரு பாகத்தை எடுத்துக்கொள்ள வேண்டும். அவ்வளவுதானே!"

"அதுதான் இல்லை."

"என்ன விளையாட்டு இது ரங்கு! யாராவது வந்துவிடப் போகிறார்கள். சாப்பிட்டுவிட்டு அப்புறம் வைத்துக்கொள்ளலாம் விளையாட்டை எல்லாம்."

"நான் ஒன்றும் விளையாடவில்லையே!"

"விளையாட்டு இல்லாமல் இது என்னவாம் பின்னே? மூன்று காய்களில் ஒன்றரை எனக்கு; ஒன்றரை உனக்கு. இந்தக் கணக்குத் தெரியாதாக்கும் உனக்கு!"

"ஓகோ, அந்தக் கணக்கில் இருக்கிறாயா? அதுதான் இல்லை."

"ஏன்?"

"அப்படிக் கேள், சொல்லுகிறேன். மரத்திலிருந்து மாங்காய் பறித்துப் போடுகிற ஒரு வேலைதான் உனக்கு. என்னுடையது அப்படி இல்லை. மரத்தில் மாங்காய் இருக்கிற இடத்தை

உனக்குக் காட்டவேண்டும். இது ஒரு வேலையாயிற்று? கீழே காவற்காரனோ இன்னும் யாராவதோ வராமல் இருக்கிறார்களா என்பதைக் கவனித்துக் கொள்ள வேண்டியது இரண்டாவது வேலை. ஆக இரண்டு வேலை எனக்கு. மொத்தம் மூன்று காய்கள் இருக்கின்றன. மொத்தம் மூன்று வேலைகள். அதில் நீ செய்தது ஒரு வேலை. நான் செய்தது இரண்டு வேலைகள். நீ செய்த ஒரு வேலைக்கு ஒரு மாங்காய். நான் செய்த இரண்டு வேலைகளுக்கு இரண்டு மாங்காய். இதில் யோசனை என்ன இருக்கிறது?'' என்றான் ரங்கு.

''என்ன ரங்கு. விளையாட்டிற்குச் சொல்கிறாயா? நிஜமாகத்தான் சொல்கிறாயா?'' என்றான் விச்சு.

''விளையாட்டு என்ன இதில்? நிஜமாகவேதான் சொல்லுகிறேன்'' என்றான் ரங்கு.

''நிஜமாகவேயா சொல்கிறாய்?'

''நிஜமாகவேதான்!''

''யாரையாவது கேட்டுப் பார்ப்போமா?''

''இதற்கு யாரைப்போய்க் கேட்க வேண்டும்? கைப் புண்ணுக்குக் கண்ணாடி எதற்கு?'' என்று சொல்லிக்கொண்டே இரண்டு மாங்காய்களையும் 'லபக்' கென்று கடித்து விட்டான் ரங்கு.

விச்சுவுக்கு ஒன்றும் தோன்றவில்லை. ரங்குவோ தன்னைவிடப் பெரியவன்; பலசாலி. அதிகம் பேசினால் பல்லைத் தட்டிக் கையில் கொடுத்துவிடுவான். என்ன செய்வது? கண்களில் நீர் துளிக்கிறது.

நல்ல வேளையாக அந்தச் சமயம் விச்சுவின் மூத்த சகோதரன் அங்கே வந்தான்.

ரங்குவுக்கு அஸ்தியில் கொஞ்சம் காபரா எடுத்துக்கொண்டு விட்டது. இருந்தாலும் மாங்காய்களைச் சாமர்த்தியமாக எச்சிலாக்கி விட்டோம் என்ற தைரியம் ஒரு பக்கம்.

''என்னடா இங்கே தகராறு?'' என்று கேட்டான் விச்சுவின் சகோதரன்.

விச்சு நடந்ததையெல்லாம் சொன்னான்.

''விச்சு சொல்வது சரிதானா?'' என்று ரங்குவை நோக்கிக் கேட்டான் விச்சுவின் சகோதரன்.

''சரிதான்'' என்று சொல்லி விட்டு, தன் கட்சியையும் சொன்னான் ரங்கு.

''ஓகோ, இது யாரை ஏமாற்றுகிற கதை? அந்த அயோக்கியத்தனமெல்லாம் வைத்துக்கொண்டால் பல்லைத் தட்டி விடுவேன். எடு, மாங்காயை!'' என்றான் விச்சுவின் சகோதரன்.

"எச்சிலாக்கி விட்டேனே!' என்றான் ரங்கு.

"பரவாயில்லை! பாதி நறுக்கிக் கொடு. நான் சாப்பிடுகிறேன்" என்றான் விச்சுவின் சகோதரன்.

அதற்கு மேல் ஒன்றும் சொல்ல முடியாமல் மாங்காயைக் கீழே ஒரு கல்லின்மீது வைத்து மற்றொரு கல்லினால் அதைப் பாதியாக நறுக்கிக் கொண்டிருந்தான் ரங்கு.

யாரும் எதிர்பாராதபடி 'தூ' என்று அதன்மீது எச்சிலை உமிழ்ந்துவிட்டான் விச்சுவின் சகோதரன்.

ரங்கு பேந்தப் பேந்த விழித்தான்.

விச்சுவை விரட்டியதுபோல் அவன் சகோதரனை விரட்ட முடியுமா? ஒன்றும் செய்யத் தோன்றாதவனாய் எச்சில் மாங்காயையும் அந்தச் சகோதரர்கள் இருவரையும் மாறி மாறிப் பார்த்தான்.

"விச்சுவுக்கு உபயோகப்படாதவாறு அவனை ஏமாற்றிச் சாப்பிட்டுவிடலாம் என்ற தைரியத்தில் தானே எச்சிலாக்கினாய்? அது உனக்கும் உபயோகப்பட வேண்டாமென்றுதான் நான் இதை எச்சிலாக்கினேன். இனி இந்தமாதிரிச் சிறு பிள்ளைகளை ஏமாற்றினால் தோலை உரித்துவிடுவேன், பத்திரம்! இந்தத் தடவை தொலைந்து போகிறது என்று மன்னித்தேன். ஜாக்கிரதை!" என்று கண்களை உருட்டி எச்சரித்தான் விச்சுவின் சகோதரன்.

ரங்கு வாயைத் திறக்கவே இல்லை!

முயல்களின் தைரியம்

முயல்களுக்குத் தாங்கள் எப்பொழுதும் பயந்த சுபாவத்துடனும் எந்த மிருகத்தையாவது கண்டுவிட்டால் ஓட்டமாக ஓடி மறைந்து கொள்வதும் கொஞ்சங்கூடப் பிடிக்கவில்லை. ஆயுள் பூராவும் இப்படியே பயந்து சாவதென்றால் யாருக்குத்தான் வாழ்க்கை ருசிக்கும்? இந்தப் பயந்தாங்கொள்ளி வாழ்க்கையில் சலித்துத் தங்கள் கஷ்டமான நிலைமைக்கு ஒரு முடிவு காண எல்லா முயல்களும் ஒன்று கூடி, ஒரு பெரிய மலையுச்சியிலிருந்து தைரியமாகக் கீழேயுள்ள ஏரியில் குதிக்க வேண்டியது என்று தீர்மானம் நிறைவேற்றின. எல்லா முயல்களும் உடனே மலையுச்சிக்குத் தாவித் தாவி ஓடி ஏறின. உடனே அங்கிருந்து எல்லாம் ஒரே சமயத்தில் ஏரியில் குதித்தன. இந்தச் சத்தத்தில் அந்த ஏரியில் வசித்து வந்த தவளைகள் பயந்து அவசர அவசரமாக நீரின் அடிப்பாகத்துக்குச் சென்று தங்களை ஆபத்திலிருந்து காப்பாற்றிக் கொண்டன. இவ்வளவு அவசர அவசரமாகத் தவளைகள் மறைந்ததைப் பார்த்ததும் தைரியமாக ஒரு முயல் மற்ற முயல்களைப் பார்த்து, "சகோதரர்களே! நான் சொல்வதைக் கவனியுங்கள். நீங்கள் நினைத்தபடி செய்யாதீர்கள். நம்மைவிடப் பயந்தாங்கொள்ளிப் பிராணிகளைக் கூட நீங்கள் இப்போது பார்த்தீர்கள். அவைகளே வாழ்க்கையில் சலிக்காமல் இருக்கும் பொழுது நாம் ஏன் உயிரை விட வேண்டும்?" என்று சொல்லிற்று. உடனே எல்லா முயல்களும் மெதுவாக நீந்திக் கரை சேர்ந்தன.

—ஈசாப் கதை.

கிட்டுவின் வால்

ப. ரா.

“எங்கே அந்தக் கிட்டுப் பயல்? அவன் வாலை ஒட்ட அறுத்துவிட்டு மறு வேலை!” என்று இரைந்துகொண்டே கிளம்பினார் கிட்டுவின் அப்பா. என் தெரியுமா? அவருக்கு அத்தனை கோபம். பட்டணம் பொடி வாங்குவதற்கென்று அவர் ‘ரிஸர்வ்’ செய்து வைத்திருந்த அரையணுக் காசைப் பையன் எப்படியோ மோப்பம் பிடித்துத் தட்டிக்கொண்டு போய்விட்டான்! அன்று ஞாயிற்றுக்கிழமை ஆகையால் ஊரெல்லாம் தேடியலைந்தாவது பயலைப் பிடித்துக் கொள்வதற்கு வேண்டிய நேரம் இருந்தது.

அவர் கோபாவேசத்துடன் கிளம்பிய காட்சியை வீதியில் விளையாடிக்கொண்டிருந்த வாண்டுப் பயல்கள் வேடிக்கை பார்த்தனர். அவர்கள் எல்லாரும் கிட்டுவின் சிநேகிதர்கள்தான் என்ருலும், ஒருவனுக்காவது கிட்டு சென்ற இடம் தெரியவில்லை. தெரிந்தாலும் அவனைக் காட்டிக் கொடுக்க மனம் வந்திராது. போக்கிரிகள், திருடர்கள் இவர்களிடையே ஒரு கட்டுப்பாடு, ஒற்றுமை உண்டல்லவா? உலகத்தில் ஜனங்கள் தம்மை வெறுக்கிருர்கள், பகைக்கிருர்கள் என்ற ஒரு காரணத்தினுல்தானே என்னவோ, இவர்களிடையே ஒற்றுமை வளர்கிறது. அதேமாதிரி, இந்த அப்பாக்களின் கொடுமையிலிருந்து தப்பும் விஷயத்தில் பையன்கள் எல்லாரும் ஒன்று என்று வைத்துக் கொள்ளுங்களேன்!

கிட்டுவின் அப்பா வீதி முனை திரும்பும் சமயத்தில் கோடி வீட்டுப் பஞ்சு அவரைக் கையைத் தட்டிக் கூப்பிட்டார்.

பஞ்சு சரியான கிண்டல் பேர்வழி. பேச்சிலேயே குதர்க்கமும் கிண்டலும்தான் தாண்டவமாடும். அதில் அவருக்கு ஓர் அலாதியான ஆனந்தம். ஆனுலும் அவரோடு யாரும் விரோதித்துக் கொள்ளவும் மாட்டார்கள். ஏனென்ருல், வெற்றிலை பாக்கு, புகையிலை, பொடிமட்டை ஆகிய பெரியவர்களுக்கு இன்றியமையாதவஸ்துக்கள் அவரிடம் எப்போதும் ‘ஸ்டாக்’ இருக்கும். எதிராளிக்குக் கோபம் வருமுன் இதையெல்லாம் கொடுத்து உபசாரம் செய்து மயக்கி விடுவார் மிஸ்டர் பஞ்சு!

“ஓய் ராமசாமி! பையனையா தேடிக்கொண்டு போகிறீர்? நீர் வீட்டிலிருந்து கிளம்பும்போது போட்ட கூச்சல் இங்கே தெருக் கோடியில் கேட்டதுங்காணும்” என்ருர் பஞ்சு.

“பின் என்ன ஐயா என்ருல்...? பொடிமட்டை வாங்குவதற்கு வைத்திருந்த காசை அடித்துக் கொண்டு போய்விட்டான் தடிப் பயல். அவன் வாலை அறுக்காமல்......” என்று ஆத்திரத்தினுல் பெருமூச்சு வாங்க ராமசாமி கூறினுர்.

"அடடா, உம் பையனுக்கு வால் வேறு இருக்கிறதா? இதென்ன அதிசயம்! நானும் இயற்கை சாஸ்திரம் படித்திருக்கேன். அந்த ரீதிப்படி, உமக்கு வால் இருந்தால் தானே ஐயா, உம்முடைய சந்ததிகளுக்கும் இருக்க முடியும்? சரி, போய் வாரும்!'' என்று அவர் சொன்னதும் ராமசாமிக்கு அவர் மீதும் கோபம் வரத்தான் செய்தது. ஆனாலும் என்ன செய்வது? உள்ளூறக் கோபம் பொங்க வெளிக்குப் பல்லைக் காட்டிச் சென்றார்.

மத்தியான்ன வெயில் கொளுத்திற்று. கோபத்தில் செருப்பும் குடையும் இல்லாமல் கிளம்பிவிட்ட மனிதர் தவியாய்த் தவித்தார். காலைக் கீழே வைக்க முடியாதபடி சூடு. கடைத்தெரு, ஆற்றங்கரை, கொல்லன் பட்டறை என்று சுற்றாத இடம் பாக்கியில்லை. தரையில் எங்கும் காணப்படாத அருமைப் புத்திரன் மரக்கிளைகள் மீது கிஷ்கிந்தாவாசியாக எங்காவது காட்சி தருகிறானா என்று அண்ணாந்து பார்த்துக்கொண்டே அலைந்தார். அதில் கழுத்து வலிதான் மிச்சம். அவர் கடவுளைப் பழித்தார்; கிட்டுவைப் பழித்தார்; அந்த அரையணாக் காசையும் பொடிமட்டையையும் பழித்தார். கடைசியில் வெறுங்கையுடன் அவர் வீடு திரும்பியபோது பகல் மணி இரண்டிருக்கும்.

என்ன ஆச்சரியம்! அவர் வாசற்படி ஏறுமுன் உள்ளிருந்து கிட்டுவின் குரல் கேட்டது. அப்பா வெயிலில் ஊரெல்லாம் தேடித் திரிய இவன் எப்போதோ வீட்டில் வந்து அடைக்கலம் புகுந்திருக்கிறான். திருட்டுப்போன காசு

தின்பண்டமாக மாறி அவன் வயிற்றில் அடைக்கலம் புகுந்திருக்கும் என்பதிலும் ஐயமில்லை. தற்சமயம் காமரா உள்ளில் உட்கார்ந்து இதுவரை எந்தச் சங்கீத நிபுணரும் செய்யாத ஓர் அபாரமான காரியத்தைச் செய்துகொண்டிருந்தான். அது என்னவென்று நினைக்கிறீர்கள்? பெருச்சல் வாய்பாட்டுக்கு ராகம், தாளம், வர்ணமெட்டு எல்லாம் கொடுத்துத் தொண்டை

கிழியப் பாடிக்கொண் டிருந்தான்.

காலையில் அப்பா வீட்டை விட்டுக் கிளம்பும்போது வெறும் கோபத்துடன் மட்டும்தான் சென்றார். இப்போது திரும்புகையில் ஏமாற்றம், பசி, களைப்பு எல்லாம் சேர்ந்துகொண்டிருந்தன. எனவே, பூனை எலியின் மீது பாய்வதுபோல் அவர் கிட்டுவின்மேல் பாய்ந்தார். இதை முன்னமே எதிர்பார்த்துத் தயாராயிருந்த கிட்டு, "ஐயோ அம்மா! அப்பா அடிக்கிறாரே" என்று இரைந்து கூச்சலிட்டான்.

அப்பா கோபக்காரர் என்று கிட்டுவுக்கு எப்படித் தெரியுமோ அதை விட நன்றாகத் தெரியும் அம்மாவுக்கு முன் அப்பாவுடைய ஜம்பம் சாயாது என்று! அம்மாவைக் கைக்குள் போட்டுக்கொள்வதற்காக இன்று அவன் பம்பரமாய் வேலை செய்திருந்தான். வீட்டுக்கு வந்தது முதல், கிணற்றிலிருந்து ஜலம் இறைத்துக் கொட்டி, சின்னக் குழந்தைக்கு விளையாட்டுக் காண்பித்து, அம்மா தேய்த்த பாத்திரங்களை எல்லாம் எடுத்து அடுக்கி வைத்து, இன்னும் என்னென்னவோ செய்தான். பிள்ளையின் கரிசனத்தைக் கண்டு சொக்கிப் போனாள் தாயார். அவளை இன்னும் பிரமிக்கச் செய்வதற்காகக் கிட்டு பாடம் படித்தான் - இல்லை, படிப்பதாகப் பாசாங்கு செய்தான். அத்தனை பிரயாசையும் வீண் போகவில்லை. கஜேந்திரன், 'ஆதிமூலமே! அபயம்!' என்று அலறியதுபோல் கிட்டு அலறியதும், விஷ்ணு பகவானேபோல் அபயம் அளிக்க வந்தாள் அம்மா.

"போதுமே, நீங்கள் பிள்ளையை வளர்க்கிற லக்ஷணம். இப்படிக் கண்டதற்கெல்லாம் போட்டு அடித்துத்தான் குழந்தை நாளுக்கு நாள் துரும்பாகிவிட்டது. அப்படி என்ன பெரிய தப்புச் செய்துவிட்டான்?" என்று கேட்டுக்கொண்டே பையனைத் தன் பக்கம் இழுத்துக்கொண்டாள்.

"என்ன செய்தானும், நான் இறைவாணத்தில் வைத்திருந்த காசை.........."

"எடுத்துக்கொண்டு போய் விட்டானாக்கும். அவ்வளவுதானே?"

"என்ன அவ்வளவுதானே? அது போதாதா, இந்தப் பிள்ளை உருப்பட்டு முன்னுக்கு வருகிறதற்கு? அதற்குள் திருட்டுத்தனமா? நாளைக்கு எதையாவது வேறு இடத்திலிருந்து திருடிவிட்டு ஜெயிலுக்குப் போனால் நமக்குத்தானே கஷ்டமும் அவமானமும்?" என்று அப்பா பொரிந்து தள்ளினார். அம்மா குறுக்கிட்டுக் கேட்டாள்: "அதிருக்கட்டும். நேற்று என் அஞ்சறைப் பெட்டியிலிருந்து நாலணாவை எடுத்தது யார்? முதலில் இதற்குப் பதில் சொல்லுங்கள்."

அப்பாவின் ஆவேசம் ஒரே கணத்தில் போன இடம் தெரியவில்லை. அதற்குப் பதில் அவர் முகத்தில் அசட்டுக்களை படர்ந்தது.

"ஓ! அதுவா......நான்..... நான்தான்...... அதனாலென்ன இப்போ?" என்றார் கடைசியில். அவர் குரலில் போலித் தைரியம் தொனித்தது.

"யாரைக் கேட்டு எடுத்தீர்கள்?" என்று அம்மாவின் அடுத்த கேள்வி புறப்பட்டது.

"நானாகத்தான் எடுத்துக் கொண்டேன்."



"அப்படியென்றால் அதுவும் திருட்டுத்தான். மாசக் கடைசியில் தம்படி மீறுவதில்லை என்று உங்களுக்குத் தெரியும். ஏதோ ஒரு அவசரத்துக்கென்று நான் பத்திரப்படுத்தி வைத்திருந்த காசைத் தூக்கிக் கொண்டு போய் நேற்று மூன்றரை அணவுக்குக் காப்பி டிபன் சாப்பிட்டிருக்கிறீர்கள்....."

"இல்லவே இல்லை....."

"பொய் வேறு சொல்லாதீர்கள். காலையில் ஹோட்டல்காரப் பையனே சொன்னான்....அப்புறம் மிச்சமிருந்த அரையணாவைப் பொடி வாங்க ஒளித்து வைத்தீர்கள். அதைத்தானே கிட்டு கொண்டு போய், பப்பர்மிட் வாங்கினான்? அவன் குழந்தைதானே? போனால் போகிறது. நான் வேறு அரையணா தருகிறேன்...."

அப்பாவின் முகம் பார்க்கப் பரிதாபமாய் மாறிவிட்டது. கிட்டுவுக்கு ஒருபுறம் சிரிப்புத் தாங்கவில்லை; மறு பக்கம் தகப்பனாரிடம் சிறிது அநுதாபங் கூடத் தோன்றியது. கணவரை 'மடக்கு மடக்கு' என்று மடக்கிய பின்தான் அம்மா விட்டாள். அதற்குள் அவரது கோபம், பசி, தாகம் எல்லாம் ஒன்று பாக்கியில்லாமல் பறந்தோடி விட்டன.

கிட்டு அம்மா கொடுத்த அரையணாவை வாங்கிக்கொண்டு அப்பாவுக்குப் பொடி வாங்க ஓடினான். அவன் வாலும் அறுபடாமல் தப்பியது.

ரஸிகர்களுக்கோர்
ஹாஸ்யக்கலை
விருந்து!
விஜயாவின்
கல்யாணம்
பண்ணிப்பார்
டைரக்ஷன்... ப்ரசாத்
தயாரிப்பு.... நாகிரெட்டி... சக்ரபாணி

குடும்பப் பத்திரிகைகள்

கலைமகள் - மணிக் கணக்காக உட்கார்ந்து, சுவாரஸ்யமாகவும் உபயோகமாகவும் படிக்கக்கூடிய கதைகளும் கட்டுரைகளும் நிறைந்தது. தமிழர்கள் எங்கிருந்தாலும் தமிழ் மணத்தை அவர்களுக்கு வாரி வழங்கும் மாதப் பத்திரிகை. ஜூலை முதல் புதிய தொடர்கதை ஆரம்பம்.

வருஷ சந்தா ரூ. 6-

மஞ்சரி - நாட்டின் பல பாஷைகளில் வெளியாகும் நூற்றுக்கணக்கான பத்திரிகைகளிலிருந்து சிறந்த விஷயங்களைப் படித்து ஆராய்ந்து பற்பல ருசியும் பயனும் மிகுந்த கட்டுரைகளைத் தாங்கி வருகிறது மஞ்சரி. ஒவ்வோர் இதழிலும் ஒரு முழுப் புத்தகச் சுருக்கமும் வருகிறது.

வருஷ சந்தா ரூ. 4/8-

கண்ணன் - ஐந்து முதல் பதினைந்து வயது வரையுள்ள உங்கள் செல்வக் குழந்தைகளைக் களிப்பில் ஆழ்த்தும் கதைகளும் அறிவை வளர்க்கும் விசேஷப் பகுதிகளும் அவர்களுடைய திறமையைத் தூண்டும் அம்சங்களும் நிறைந்தது.

வருஷ சந்தா ரூ. 3-

தபால்பெட்டி 604 * மயிலாப்பூர் * சென்னை, 4.

உங்கள் குடும்பத்திலுள்ள ஒவ்வொருவருக்கும் பயன்படும் இந்த மூன்று பத்திரிகைகளின் குடும்பச் சந்தா ரூ. 12/-